# செந்தமிழ்ச் செல்வி




## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| எழிற் செல்வர் | க0ரு |
| ஓம்நமசிவய ! | க0கூ |
| சூடர்ப்பை எது ? | ககங |
| சிறுமியின் இலக்கியச் சிந்தனை | கஉங |
| தொல்காப்பியத்தின் பழமை | கஉகூ |
| மறைந்த மணி | கஙச |
| தமிழ் நெடுங்கணக்கு - பெயரும் எண்ணும் | கஙஎ |
| தமிழ் எழுத்து மாற்றம் | கசரு |
| மதிப்புரை | கருக |
| செய்திகளும் குறிப்புக்களும் | கருஉ |


சிலம்பு உகு ★ வள்ளுவர் ஆண்டு ககூஅஉ ஐப்பசி (Nov. 1951) ★ பரல் ரு

# 'செந்தமிழ்ச் செல்வி'

## இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. திரு. மகாமகோபாத்தியாய பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

உ. ,, 'சித்தாந்த கலாநிதி' வித்துவான், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழ்விரிவுரையாளர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

ங. ,, துடிசைகிழார், அ. சிதம்பரனார் அவர்கள், கோயமுத்தூர்.

ச. ,, தி. சு. கந்தசாமி முதலியார் அவர்கள், எம். ஏ., வழக்குரைஞர், சாத்தூர்.

ரு. ,, வித்துவான், மு. இராசாக்கண்ணனார் அவர்கள், B.O.L. (Hons.) M.E.S., அரசினர் கல்லூரி, கோயமுத்தூர்.

சு. ,, வித்துவான், பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள், பி. ஏ. (ஆனர்ஸ்) பி. ஓ எல்.
அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, கொழும்பு.

எ. ,, 'சித்தாந்த பண்டிதர்' ப. இராமநாத பிள்ளை அவர்கள், கழகப்புலமையாளர்.

---


## திருக்குறள் நாட்குறிப்பு 1952

நல்ல வெள்ளைத்தாள். $4\frac{3}{4}'' \times 3\frac{1}{2}''$ அளவு. ஒருநாளைக்கு ஒருபக்கம். அழகான கலிக்காக்கட்டு. கருத்துரையுடன் கூடிய (1096 முதல் 1330 முடிய) குறள் மணிகளும், கலித்தொகை மணிகளும், கொல்லம் ஆண்டு, வருடம், மாதம், தேதி, கிழமை, திதி, நட்சத்திரம், யோகம் எல்லாம் ஒவ்வொரு பக்கத்திலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பக்கங்கள் அழகாகக் கோடிடப்பட்டுள்ளன.

நாளட்டவணை, படுபட்சி, சிறப்புநாட்கள், கிறித்தவர் மகமதியர் பண்டிகைகள், அரசினர் விடுமுறைநாட்கள், வாரசூலை, எமகண்டம், இராகு குளிகை காலம் முதலிய பல செய்திகள் அடங்கியுள்ளன.

செலவு கணக்கெழுதவும், முகவரிகள், நினைவுக்குறிப்புக்கள் எழுதவும் இடங்கள் விடப்பட்டிருக்கின்றன.

குறைந்தபடிகளே அச்சிடப்பட்டுள்ளன. விலையும் மிகக் குறைவே.
தேவைக்கு உடனே முன்பணத்துடன் எழுதுங்கள்.

ஒன்றின் விலை ரூ. 1-4-0. அஞ்சல் மூலம் ரூ. 1-10-0.

ஓம்

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௬ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௨, ஐப்பசி நவம்பர், 1951 | பரல் ௩

இணையில் திருக்குறளை எங்கணும் பரப்பிய

## எழிற்செல்வர்

**திருக்குறள் அட்டாவதானம், திரு. தி. ப. சுப்பிரமணியதாசு அவர்கள்**

நம் அட்டாவதானச்செல்வர் திருவிதாங்கூர் நாஞ்சில் நாட்டைச்சார்ந்த திருப்பதிசாரத்தில் தோன்றியவர்கள். இவ்வூர் திருமால் திருவூர் நூற்றெட்டனுள் முதன்மை பெற்றது.

இவ்வூரின்கண் மறமானமிக்க மூதிற்குடியில் பெருநிலத் திருவும் பேராண்மையும் ஒருங்கமைந்த திரு. பசுங்கிளித்தேவர் அவர்கட்கும், அவர்தம் கற்பிற்சிறந்த பொற்புறு மனைவியார் ஆச்சிஅம்மாள் அவர்கட்கும் தவப்பேற்றால் தோன்றிய தமிழ்ப் பெருமகனார் நம் தாசவர்கள் ஆவர். இவர்கள் 1878-தைத் திங்கள் சதய நன்னாளில் தோன்றினார்கள். இவர்கள் திண்ணைப் பள்ளிக்கூடத்து நான்காவது வகுப்புவரையுமே கற்றனர். தனிப்பெருந்தாயர் இவர்தம் பத்தாம் அகவையில் ஆவிநீத்தனர். பெரிய தாயார் பேரன்புடன் வளர்த்தனர்

தம் பதினெட்டாவது அகவைக்கண் நாற்குணமே நாற் படையா நல்லறிவே சொல்லமைச்சாய் அன்பும் அழகும் ஆற்ற லும் மிக்க பொன்னார் திருப்பெயர் இலக்குமி அம்மாளைக் கலி யாணம் செய்தனர். இவ்வம்மையார் ஈராண்டில் இறையுல கெய்தினர்.

மாண்புறு மனைவியார் சேண்புக்கபின் பத்தாண்டுகள் வரை குலத்தொழிலாம் மல் (குஸ்தி) தொழிலை பலர்புகழ் பான் மையிற் பயின்று பயிற்றுவித்து மேன்மையுற்றனர். நாடக அரங்குகளில் ஒழுக்கமும் வாய்மையும் தூய்மையும் உடையார் விழுப்பேறெய்தும் சிறப்பும், அஃதிலார் பழிபாவத்தோடு இழி

வெய்தி இன்னலுறும் இயல்பும் உலகோர் உணர்ச்சியுடன் ஓர்ந்து உண்மை கடைப்பிடித்து ஒழுகியுய்யக்காட்டும் நடிப்பிலும் பீடுபெற்றனர். இவற்றுடன் கைசெய்தூண்மாலை உழவு தொழிலிலும் பழவிறல் பெற்றனர்.

ஆள்வினையுடைமையால் செப்பரும் மூப்பதாம் அகவைக்கண் வடசேரி இராமசுப்பு ஆசாரியார்பால் வேதாந்தம், திருவிளையாடல், நன்னூல் முதலிய தொன்னூல்கள் கற்றனர்.

நாகர்கோவில் மார்க்கண்டேயர் என்பார்பால் திருக்குறளை மறுவற ஓதினர். திருக்குறள் ஓதும் செய்தவப்பேற்றால் தம் முப்பத்துமூன்றும் அகவைக்கண் பொல்லாப் புலாலுணவுநீத்து நல்லுணவால் நல்லாராயினர். கோட்டாறு சதாவதான, செய்குத் தம்பிப்பாவலர் அவர்களிடம் திருக்குறளை மீண்டும் தெளிய ஓதி மாண்டகு திறலினராய் மக்கட்கெல்லாம் தக்கவகையாக ஓதுவிக்கவேண்டுவது திருக்குறளே என்று தெளிந்து அத் திருத்தொண்டிற்கே தம்மை ஈடுபடுத்த நாடி உரத்தொடும் ஒப்புவித்து வாழ்நாள் முற்றும் ஒழுகிவருவாராயினர்.

1911-இல் பார்புகழ் பார்வதியம்மையாரைச் சீர்பெறத் திருமணஞ் செய்தனர். பார்வதி அம்மையார் தம் முப்பத்தைந் தாம் அகவையாகிய 1931-மார்ச்சு 25-ஆம் நாள் நிறையுலகெய்தினர்.

தமிழக முற்றும் திருக்குறளைப் பரப்ப வேண்டும் என்னும் தனிப்பெரும் நோக்குடன் 1920-ஆம் ஆண்டு திருக்குறள் விரிவுரையாற்றச் சிவனருளால் செய்தக்க தவமெனத் துவங்கினர். முதன்முதல் சென்னைமா நகர்க்கண் விபுலானந்த அடிகள், டாக்டர், சி. நடேச முதலியார் அவர்கள் தலைமையில் பல்வேறிடங்களில் திருக்குறள் அட்டாவதனம் செய்து மட்டில் பெயரும் பீடும் பெற்றனர்.

1933-இல் மீட்டு மொருமுறை சென்னையம்பதிக்கண் திருக்குறள் அட்டாவதானம் நிகழ்த்தினர். அப்பொழுது திரு. உ. வே. சாமிநாத ஐயரவர்கள், இரசிகமணி டி. கே. சி. அவர்கள், கோ. வடிவேலு செட்டியாரவர்கள், கா. நமச்சிவாய முதலியாரவர்கள், திரு. வி. க. அவர்கள், வ. ரா. அவர்கள், மணி, கோடீசுவர முதலியாரவர்கள், 'தினசரி ஆசிரியர்', டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் முதலிய பல்லோர் குழுமிப் பாராட்டினர்.

1949-இல் சென்னையில் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் கூட்டிய திருக்குறள் மாநாட்டிலும் பெரியார் பலர் முன்னிலையில் திருக்குறள் அட்டாவதானம் செய்து திகழ்ந்தனர்.

1951, பிப்பரவரி, 4-ஆம் நாள் சென்னை கோகலே மண்டபத்தில் திரு. T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை M.A., B.L., M.O.L., அவர்கள் தலைமையில் திருக்குறள் அட்டாவதானம் நடைபெற்றது. அதன் விரிவை நம் செல்வியில் (சிலம்பு-உரு, பரல்-சு, பக்கம் ௩௦௨) காண்க. இதை யொட்டிச் சென்னையை அடுத்துள்ள பல்வேறிடங்களிலும் தக்கார் பலர் தலைமையில் அட்டாவதானங்கள் நிகழ்ந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் இருபாலாரினும் கண்டு களித்து கருத்துட்கொண்டு இன்புற்றனர். இதுவே அவர் தம் அட்டாவதான இறுதியாகும்.

1943-இல் கோயமுத்தூரில் Sir. R. K. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் அட்டாவதானம் நிகழ்த்தி அனைவரும் போற்ற வீற்றிருந்தனர்.

தென்காசி, காரைக்குடி முதலியவற்றில் அமைத்த கழகங்கள் நின்று நிலவுகின்றன. 1940-இல் மதுரையில் சர். P. T. இராசன் அவர்கள் ஆதரவில் தோற்றுவிக்கப்பெற்ற கழகமும் பிறைபோல் வளர்ந்து வருகின்றது.

தவத்தால் தோன்றிய தன் மகனார் தி. சு. இராமதாசு என்னும் சிறுவர்க்கு அவர் தம் பதினோராவ தகவைக்குள் திருக்குறள் முழுவதையும் ஓதச்செய்து தம்முடன் அழைத்துச் சென்று தாம் அட்டாவதானம் செய்யும் இடங்களிலெல்லாம் தம்மகனாரையும் செய்யச்செய்து சிறப்பித்தனர்.

தம் அருமை மகள் வாசுகி அம்மையார் விக்கிரமசிங்க புரத்தில் வாழ்கின்றனர். கும்பகோணத்தில் தம் இறுதிச் சொற்பொழிவு ஆற்றிவிட்டு மகன் இல்லம் வந்து நான்கு திங்கள் தளர்வுற்றிருந்தனர்; பின் மகள் இல்லம் சென்றனர். 1951-செப்டம்பர், 27-வியாழன் மாலை 6 மணிக்கு வீட்டுப்படியில் ஏறும்போது தவறி விழுந்தனர். காலில் சிறிது அடிபட்டது; அக்டோபர் 2-ஆம் நாள் மருந்துசெய்ய நெல்லை வந்தனர். பத்து நாட்களுக்குள் கால் குணம் எய்திற்று. ஆனால், ஊண் அருந்த ஒல்லவில்லை. பாலும் பழச்சாறும் பல்காலும் அருந்தினர். அக்டோபர் 29-ஆம் நாள் திங்கள் இரவு 8-30 மணிக்கு ஆவி பிரிந்தது. பலரும் வருந்தினர்; ஆயிரக்கணக்கான மாணவர் கையறுநிலை அறிவித்தனர். அக்டோபர் 30, பகல் 1மணிக்கு அடக்கம் செய்யப் பட்டது.

யாமும் எம் முழுக் கையறுநிலைப் பரிவினை அவர்கள் குடும்பத்தார்க்கு உணர்த்துகின்றும். அவர்கள் தம் ஆவி இறைவனடிசேர்ந்து இன்புறுமாக.

—இதழாசிரியர்.

# ஓம் நமசிவய!

[இசைவள்ளல், தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவர்கள்]

தமிழ்ப் பாஷையே எல்லாப் பாஷைகளுக்கும் தாய்ப் பாஷையாய் இருந்திருக்க வேண்டுமென்பதற்கு யாவரும் மறுக்கக்கூடாத முக்கிய ஆதாரம் பிரணவ மந்திரம்.*

ஓம் என்ற பிரணவ அட்சரம் பரமசிவத்தையே குறிக்குமென்றும், அதைத் தியானம் பண்ணுகிறவன் சிவத்தையே அடைகிறுனென்றும், சிவமாகவே விளங்குகிறுனென்றும், அவ்வெழுத்தே மூல மந்திரமாமென்றும், அம் மந்திரத்தைக் கொண்டே தாங்கள் ஆரம்பிக்கும் எதையும் தொடங்க இடையூறின்றி முடியுமென்றும் அறிந்த தமிழ்மக்கள் அதையே தங்களுக்கு ஜெபமாகக் காலை மாலைகளில் செய்து வந்தார்களென்பது நாம் யாவரும் அறிந்த விஷயமே. பிராணுயாமம் செய்து ஆயுள் நீடித்திருக்கும் வல்லமை பெற்று,


"வாசி வாவென்று வாசியில் ஊடாடி
வாசியை உள்ளே வைத்துநீ பூஜித்தால்
வாசியும் ஈசனும் மருவிஒன் ருகும்
வாசியைப் போல்சித்தி மற்ருென்றும் இல்லையே"

என்ற வாக்கியத்தின்படி தெய்வப் பிரசன்னமும் பெற்று விளங்கிஞர்கள். தாங்கள் யோகசாதனை செய்கையில் ஓம் என்ற பிரணவ அட்சரத்தையே உச்சரித்து மாத்திரைகளின் கணக்கை நிச்சயப் படுத்திக்கொண்டு வந்தார்கள்.

இவ் வெழுத்திஞல் குறிக்கப்படும் சிவத்தினின்று ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்ற பஞ்ச சக்திகள் உண்டாகிறதாகவும், அச் சக்திகளின் செயல்களைப் பெறுவதற்கு நமசிவய என்ற ஐந்து அட்சரங்களை அதாவது பஞ்சாக்ஷரத்தை நடுவணை பிடித்து மாறி ஐந்து மந்திரங்களாக்கி நமசிவய, சிவயநம, யநமசிவ, மசிவயந, வயநமசி, என்ற ஐந்து மந்திரங்களிலிருந்தும் 125 என்னும் அநேக மந்திரங்களுண்டாக்கி, அவைகள் ஒவ்வொன்றிற்கும் ஓம் என்ற பிரணவ மந்திரத்தைச் சேர்த்து ஜெபித்து, அவ் ஒவ்வொன்றிற்குமுரிய செயல்களையும் பெறுவார்களென்று விரிவாகச் சொல்லியும், மற்றவர்களுக்கு உபதேசித்தும், தாங்கள்

---

* ஆசிரியரவர்களின் தனிமுயற்சியால் ஆக்கி வெளிப்படுத்திய "கருணுமிர்த சாகரம்" பக்கம் 62-64 இல் காணப்படுகின்றது. அவர்கள் அருந்தொண்டைப் போற்றித் தமிழ் நலங்கருதி நன்றி வணக்கத்துடன் வெளியிடுகின்ருேம்.



"நவ்விரண்டு காலதாய் நவின்றமவ் வயிறதாய்ச்
சிவ்வி ரண்டு தோளதாய்ச் சிறந்த வவ்வு வாயதாய்
யவ்வி ரண்டு கண்ணதாய் எழுந்து நின்ற நேர்மையிற்
செவ்வை யொத்து நின்றதே சிவாய மஞ்செ ழுத்துமே."

சிவவாக்கியர் 97.

செ. பக்கம்—க0கூ]

சாதித்தும் தம்பனம், மோகனம், வசியம், மாரணம், உச்சாடனம், ஆகருடணம், வித்துவேடனம், பேதனம் என்னும் அஷ்டகர்ம சித்திகளையும் பெற்றுச் சிறந்து விளங்கினார்கள். இன்னும் இவ்வைந்து எழுத்துக்கள் நிறைந்த சிதம்பரச் சக்கரத்தை ஜெபிக்கவும் கோயில்களில் ஸ்தாபிக்கவும் வேண்டிய விதிகளும் முறைகளும் விரிவாய்ச் சொல்லியிருக்கிறார்கள். இவ் வைந்து எழுத்துக்களும் பிரணவத்தின் ஐந்து சக்திகளென்றும், இவ் வைந்து சக்திகளும் பிரணவத்தி லடக்கமென்றும், பிரணவமே பிரமமென்றும், பிரமமே பேரண்டம் சிற்றண்டமென்றும், பிரணவமே பிராணனென்றும், பிரணவமே அகார, உகார, மகாரமென்ற அட்சரங்களின் சேர்க்கையான ஓம் என்றும், சத்து, சித்து, ஆனந்தம் என்றும், சிருஷ்டி-திதி-லய மென்னும் முத்தொழில்களாகி உலகம் நடத்தப்பட்டு வருகிறதென்றும், எட்டும் இரண்டும் பத்துமான அளவுடன் விளங்கிக்கொண்டிருக்கிறதென்றும், அகார, உகார, மகாரமான ரவி, மதி,

## படவிளக்கம்

[ஓம் நமசிவய என்ற ஐந்து அட்சரங்கள் சரீரத்தில் நிற்கும் விதத்தைக் காட்டும் படவிளக்கம்.]

| | | | | |
|---|---|---|---|---|
| மேல் மூலம் | ஓ<br>ய | வான் | சதாசிவம் | ஆக்கினை<br>சாக்கிரம் |
| கீழ் நோக்கிய<br>முக்கோணம் | வ | வளி | மகேஸ்வரன் | விசுத்தி<br>சொற்பனம் |
| அறுகோணம் | சி | தீ | ருத்திரன் | அனாகதம்<br>சுழுத்தி |
| பிறை | ம | நீர் | விஷ்ணு | மணிபூரகம்<br>துரியம் |
| நாற்கோணம் | ந | நிலம் | பிர்ம்மா | சுவாதிஷ்டானம்<br>துரியாதீதம் |
| கீழ் மூலம் | ஓ | | கணபதி | மூலாதாரம் |

அஞ்சுக வஞ்செழுத் துண்மை யறிந்தபின்
நெஞ்சகத் துள்ளே நிறையும் பராபரம்
வஞ்சக மில்லை மனைக்கு மழிவில்லை
தஞ்ச மிதுவென்று சாற்றுகின் றேனே. திருமூலர்: கூஎ.

அக்கினி என்று சொல்லப்படும் கலைகளாய் உயிர்கள்தோறும் பிராணனாய் விளங்குகிறதென்றும், இப் பிராணனே ஜீவனென்றும், ஆணவம், காமம், மாயை என்ற மும்மலமற்ற ஜீவனே சிவனென்றும், ஜீவச்செயல் ஒழிந்து சிவச்செயலில் நிற்பதே தவமென்றும், யோகமென்றும், மோட்சமென்றும் கண்டறிந்தார்கள். இதையே பலநூலாக பக்குவர்களுக்குத் தகுந்தவிதம் எழுதிவைத்தார்கள். இவ் வெழுத்துக்களின் பெருமையையும் செயல்களையும் அவர்கள் எழுதிய யோகநூல்களிலும் ஞான நூல்களிலும் மிக விரிவாகக் காணலாம்.

ஓம் நமசிவய என்ற எழுத்துக்களை நாம் கவனிப்போமானால் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை என்னும் சரீரத்தின் ஆறு ஆதாரங்களிலுள்ள எழுத்துக்களாகச் சொல்லப்படுகிறதை அறிவோம். இவ் ஆறு எழுத்துக்களும் நிற்கும் வரிசையை நாம் கவனிப்போமானால், கீழ்முக நோக்கிய மூலாதாரத்திலிருந்து மேல்முக நோக்கிய மூலமாகிய ஆக்கினாஸ்தானம் வரையும் மேல்நோக்கிச் செல்வதாக அறிவோம். மேல்மூலத்தில் யகார அட்சரத்தில் விளங்கும் ஓங்காரம் சிரசையும் கீழ்மூலத்தில் விளங்கும் ஓங்காரம் மர்மஸ்தானத்தையும் குறிக்கும். இவ்விரண்டு இடங்களிலும் அங்கத்தின் கூறுபாடுகளை நாம் கவனிப்போமானால், ஓம் என்ற அட்சரத்தின் வடிவமும் ஒரு யானைத்தலையின் வடிவமும் ஒரு தவளைக் குஞ்சாகிய அரைத் தவளையின் வடிவமும் ஒத்திருக்குமென்பதை நாம் அறியலாம். வலதுகண்ணில் சுழித்து வட்டம் வீசி, இடதுகண்ணில் சுழித்து வட்டத்தை இருகூறாகப் பிரிக்கக் கால் இழுத்து, கடையில் சுழித்த ரகசியத்தைத் தன்னையறிந்த மகான்கள் உணர்வார்கள். அகார உகாரமுமாய் இரண்டும் மகாரமான மகிமையை மற்றவர் அறியாமையினால் அவர்களுக்கு மந்திரமாக்கினார். மந்திரமாய் விளங்கும் இவ்வட்சரம் நேத்திரமான இரு சுழிகளாகவும் மூளையின் இரு பாகமாகவும் மூளையினின்று புறப்பட்ட வாசியின் காலாகவும் சகல சித்துமாகவும் விளங்கி நின்றதுபோலவே, கீழ்மூலத்திலும் ஜீவர்கள் உற்பத்தியாகும் ஜனனேந்திரிய அவயவங்களாக ஓங்காரமாய் விளங்கி நிற்கிறது. இது மாத்திரமா? இவ்விரு இடங்களிலும் ஓங்காரத்தை ஒத்திருந்த இந்தச் சரீரமானது ஆதிநாதத்தில் விருத்த வடிவமுள்ள தலையும் ஒடுங்கிச் சிறுத்த வாலுமுள்ள ஓங்காரத்தை ஒத்திருக்கும் ஒரு சிறு அரைத்தவளைக் குஞ்சுபோல இருந்ததென்று கற்றுணர்ந்தோர் சொல்வார்கள். இம் முதல் வடிவத்தையும் கீழ்மேல் மூலங்களில் விளங்கும் அதன் சொரூபத்தையும் குறிக்கும் ஓங்காரத்தை மூலமந்திர அட்சர

மாக்கினார்கள். இவ்வட்சரத்தின் மகிமையை உள்முகமாக அறிவதற்குத் தன்னை அறிதலென்றும், அதுவே தலைவனைக்காண வழியென்றும் அதற்காகத் தூல சரீரத்தின் பஞ்சீகரண தத்துவங்களையும் மிக விரிவாகக் கூறியிருக்கிறார்கள்.

வேதாந்த சாஸ்திரத்தின் உட்பொருளாகிய 'ஓம்' என்ற அட்சரம் தமிழுக்கே உரியது. தமிழ் அட்சரத்திலேயே தூல அட்சரத்தின் வடிவம் தோன்றுகிறது. மந்திரங்களுக்கு முதன்மையான ஓம் என்ற பிரணவ மந்திரம், அ + உ + ம = ஓம் என்று முடிந்த விதத்தையும் ஓசையையும் தூலவடிவையும் உள்ளது உள்ளபடியே காட்டிக்கொண்டு நிற்கிறது. இச் சூட்சும அட்சரத்தை வேறு எந்தப் பாஷை எழுத்தும் உள்ளது உள்ளபடி உட்பொருளை விளக்கி நிற்கக்காணோம். ஓம் என்ற மந்திரத்தை மிகப் பிரதானமாகக்கொண்டு தங்கள் இகபர வாழ்விற்கு இதுவே ஆதியென்று அனுஷ்டித்து வரும் ஆரியர், தாங்கள் முத்திரையாய் வழங்கும் இவ்வெழுத்திற்குத் தமிழ் எழுத்தைத் தவிர வேறு எந்த எழுத்தைப் போடுவார்? வேறு எழுத்துப் போட்டால் உட்பொருளைக் குறிக்குமா? குறியாத அந்நிய எழுத்தைப் போட்டு ஜெபிக்கலாமா?

## பஞ்சாட்சரங்களின் சேர்க்கையாலே தூலவடிவம் தோன்றுகிறது.

நமசிவய என்ற ஐந்து அட்சரங்களினால் குறிக்கப்படும் ஐந்து ஸ்தானங்களிலும் முறையே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்ற ஐந்து பூதங்களும்; பிர்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்ற பஞ்ச கர்த்தாக்களும்; பஞ்ச சக்திகளும்; பஞ்ச வர்ணங்களும்; நாலு, ஆறு, பத்து, பன்னிரண்டு, பதினாறு, மூன்று அட்சரங்களுமான 51 அட்சரங்களும்; இவ் வட்சரங்களினால் குறிக்கப்படும் பிதுர், தேவர், தேவதைகள் சக்திகளும் விளங்கிநின்று ஓர் உடலாய் ஓர் ஜீவனாய் தெய்வபதியாய் தெய்வவாகனமாய தெய்வ ஆலயமாய் விளங்குகிறதென்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"ஐம்ப தெழுத்தே அமர்ந்த வேதங்கள்
ஐம்ப தெழுத்தே ஆகமம் ஆதிகள்
ஐம்ப தெழுத்தின் அறிவை அறிந்தபின்
ஐம்ப தெழுத்தே ஐந்தெழுத் தாமே." திருமூலர்: ௨௬௯௮.

என்ற திருமூலர் திருமந்திரத்தின்படி தெய்வச்செயல்கள் அத்தனையும் ஐந்து அட்சரங்களால் குறிக்கப்படும் ஐந்து ஸ்தானங்களிலும் ஐந்து கர்த்தாக்களாகவும் சக்திகளாகவும் பெற்றுத் தெய்வபதம் அடைந்தார்கள். அதன் மேன்மையை யறிந்த

பெரியோர்கள் தீமைக்கு விலகி நன்மை செய்வதையே ஜீவர்களுக்குக் கற்பிக்கவும் தன்னைப்போல் பிறனை நேசிக்கும் ஜீவ காருண்யமாகிய நிர்விகற்ப சமாதியில் நின்று முத்திநெறி கூடவும் வேண்டிய சாதனங்களையும் விதிகளையும் வேதமாக எழுதிவைத்தார்கள். வேதத்தின் திறவுகோலாகிய மௌனாட்சரத்தின் மகிமையை அனுஷ்டித்தவரே அறிவார்.

பிரணவ அட்சரத்தின் உடலாகிய பஞ்சாட்சரங்களின் வடிவத்தைக் கவனிப்போமானால், நகாரம் என்ற முதல்எழுத்து இடம் வலமாக மாறி சுவாதிஷ்டான சக்கரத்தில் எழுத அதுவே இரண்டு கால்களாகவும், இரண்டாவது எழுத்தாகிய மகாரத்தை இடம் வலமாக இணைத்து மணிபூரகத்தில் அடைக்க அது வயிறாகவும், சிகாரமாகிய மூன்றாவது எழுத்தை இடம் வலம் இணைத்து அநாகதச் சக்கரத்தில் எழுத இரண்டு கைகளாகவும் இரத்தாசயமாகவும், விசுத்திஸ்தானத்தில் முன்போல் நாலாவது எழுத்தாகிய வகாரத்தை எழுத சுவாசாசயமாகவும் கழுத்தாகவும், ஆக்கினைஸ்தானத்தில் யகாரம் எழுத அது ஓங்காரமாகவும் விளங்கி, ஒரு மனுடசரீரத்தின் அமைப்பையும் அங்கங்களையும் காட்டிக் கொண்டிருக்கும். ஆதிஸ்தானமாகிய மேல் முக்கோணத்தில் விளங்கும் ஓங்காரவடிவம சிரசையும், கீழ் முகம் நோக்கிய முக்கோணமாய் விளங்கும் மூலாதாரத்தில் ஓங்காரவடிவம் பிரஜாபதியையும் குறிக்கும்.

பிரஜைகள் உற்பத்திக்குக் காரணமாகிய மூலாதாரத்தில் உட்பொருளாய் விளங்கும் கருவும் ஓங்கார சொரூபமாய் நிற்கும். இப்படித் தூல சூட்சும காரணம் என்னும் மூன்று வழியிலும் விளங்கி நிற்கும் ஓம் என்ற அட்சரமும் அது விளங்கி நிற்கும் தூலசரீரமும் நமசிவய என்ற ஐந்து அட்சரங்களினாலாகிய சரீரத்தில் முக்கியமாக விளங்கி நிற்கிறது. தூலசரீரத்தில் ஆறு ஆதாரச் சக்கரங்களையும் எழுதி அவைகளில் அட்சரங்கள் பொருந்தி வடிவுண்டாகும் விதத்தையும் நாம் பூர்வதமிழ் நூல்களில் தெளிவாகக் காண்போம். இவ்வைந்து அட்சரங்களின் வடிவைப்போலொத்த எழுத்துக்கள் மற்றும் பாஷைகளில்லை யென்பது நிச்சயம். மந்திரங்களில் முதன்மைபெற்ற இம் மந்திரமும் மந்திரத்தின் உட்பொருள்களைக் குறிக்கும் அட்சரமும் தமிழ்ப் பாஷைக்கே யுரியவை. மற்றவர் ஜெபித்தாலும் ஜெபித்த மந்திரத்தின் உட்பொருள் காட்டும் அட்சரங்கள் இல்லாது போனாரென்பது நிச்சயம். இதுபற்றியே, தமிழ்ப்பாஷை மிகப் பூர்வமாயுள்ளதென்று நாம் துணிந்து சொல்லலாம்.

# குடம்பை எது?

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை]

## க. தோற்றுவாய்

உலகப் பொதுமறை திருக்குறள்; அந்நூலில் அமைந்து கிடக்கும் நுட்பதிட்பங்கள் பலப்பல. அதனால் அற்றைநாட்களிலிருந்து இற்றை நாள்வரை, அதற்கு அறிஞர் பலர் உரை கண்டனர். அவைகளுட் சிறந்தது, பரிமேலழகர் உரை. அவ்வுரை, அழகிய நடைத்திறத்தானும், அஃகியகன்ற கருத்துக்களானும் என்றும் பொன்னேபோற் போற்றும் பெருமை வாய்ந்து திகழ்கின்றது.

அவரின் கூரிய நுண்மாணுழைபுல இவ்வுரை, போற்றற் குரியது; படித்தற்கேற்றது; சிறந்தது; உயரியது; அவ்வுரைத் திறம், பன்னாட் பயின்றுபயின்று மகிழ்தற்குரித்து. அதனானே அவ்வுரை, 'பாரிற் பரித்த உரையெல்லாம் பரிமேலழகன்— தெளித்த உரை ஆமோ,' எனவும், 'வள்ளுவர் சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே—தெள்ளுபரி மேலழகன் செய்த வுரை...............தண்டமிழின் மேலாம் தரம்,' எனவும் வரும் பெருமையுரைகளும் அவ்வுரைக்குப் பின்னர் எழுந்து அவ்வுரைப் பண்பாட்டை மேலும் பெருமைப்படுத்துவ ஆயின.

ஆனால், எத்தகையோர்க்கும் இடையிடையே மயக்க உணர்வும், பிறழ்ந்த கொள்கையும் இருப்பது இயற்கை; உண்மை. இதனை,

> "நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
> உண்மை அறிவே மிகும்"

என்னும் இத் திருக்குறட் பொன்னுரையும், 'ஆனைக்கும் அடி சறுக்கும்' என்னும் பண்டைப் பழமொழியும் அதற்கேற்ற சான்று பகர்வனவாம்.

ஆகவே, இத்தகைய உரையில் ஒரோவொருகால் மயங்கியுள்ள நிலையை, உள்ளவாறே மயங்கினாரென்று எடுத்துக்காட்டலும், சிறந்த உரைத்திட்பங் கண்டவிடத்துப் பாராட்டுதலும், ஆராய்ச்சி அறிவுடையுலகத்துக்கு ஏற்றதும் நலமும் ஆகுமென்பது ஒருதலை. அது குறைகாணும் நிலையினும் சாராது; இழுக்கும் ஆகாது. "காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்—

ஆய்தல் அறிவுடையார் கண்ணதே," என்பது ஆன்றோர் வழக்கு. ஆகலான், நடுநிலையாளர்க்குப் பொருந்தும்; ஏற்கும்.

எனவே, பரிமேலழகியார் மயங்கக்கொண்ட பொருள்கள், திருக்குறட் பெருநூலின்கண், இடையிடையே ஆண்டாண்டு விரவிக்கிடக்கின்றன. அவைகளையெல்லாம் துருவி முற்ற முடிய எடுத்து விளக்குதலோ, வேறுபாடுகொள்ளச் செய்தலோ, குற்றங்கற்பித்துக் கோடலோ இக் கட்டுரையின் நோக்கமன்று; அஃது சால்பும் அன்று. ஆனால், இங்கே 'குடம்பை' யென்னும் சொல்லைப்பற்றிய ஆய்வு, என் மனத்தில் பலப்பல நாட்கள் எழுந்து ஈர்த்துச்செல்லும். அச்சொல் ஓரிடத்தில் துச்சில் இருக்கும் என்னை, கடல் ஆறு ஏரி பொழில் வயல் காடு மலை முதலியவாம் பல இடங்களில் எல்லாம் கொண்டு செலுத்தும்; அவ்விடங்களில் கூட்டி அலைத்து அலைத்துக் குடம்பை யெங்கே கூடெங்கே பறவைகள் எங்கே எங்கே? என்று தேடித்தேடிக் களைப்புறுத்தி மீள இருந்த இடத்திற் கொணர்ந்து நிறுத்தும். இஃது ஒருநாள் அல்ல; இருநாளல்ல; பலப்பல போதுகள். இஃது என்னைமட்டும் அலைத்ததன்று. இக் குடம்பை, புலவர் குழாங்களில் புகுந்து ஐயப்பாடுகள், சொற்போர்கள் நிகழச் செய்ததுண்டு; நிகழ்வதுமுண்டு. ஆகலான், 'குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே' என்ற தொடரில் உள்ள 'குடம்பை'க்கு ஏற்ற உண்மைஉரை காணவே எம் மனம் விழைகின்றது. அவ் விழைவின் விளைவே, இத் தலைப்பு. இதில் அப் பழமையை இப்புதுமை உலகில் கொண்டு வந்து நிறுத்தி, உண்மையறிய இதைப் பொறிக்கின்றேன். எனக்குப் புலனான உரையையும் குறிக்கின்றேன். அறிஞருலகம் 'நெடுநுகத்துப் பகல்போல்' சீர்தூக்கி ஆய்ந்து அவர்தம் உளக்கருத்தை உணர்த்துவார்களென நம்புகின்றேன். அத்தகையோர்க்கு எம் உளமார்ந்த நன்றி. இனி எடுத்துக்கொண்ட பொருள்மேற் செல்வாம்.

## உ. பரிமேலழகர் பகரும் உரை

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு" (திருக்குறள் : ௩௩௮.)

இதற்குப் பரிமேலழகர் கூறும் உரையாவது :—

"குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்று - முன்றனியாத முட்டை தனித்துக் கிடப்ப, அதனுளிருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்துபோனதன்மைத்து, உடம்பொடு உயிரிடை நட்பு - உடம்பிற்கும் உயிர்க்குமுளதாய நட்பு."

"தனித்தொழிய வென்றதனான், முன் றனியாமை பெற்றாம். அஃதாவது, கருவும் தானும் ஒன்றாய்ப் பிறந்து வேறாந்துணையும் அதற்காதாரமாய் நிற்றல்; அதனால் அஃது உடம்பிற்குவமையாயிற்று. அதனுள் வேற்றுமையின்றி நின்றே பின் புகாமற்போகலின், புள் உயிர்க்குவமையாயிற்று. முட்டையிற் பிறப்பன பிறவு முளவேனும், புள்ளையே கூறினார். பறந்து போதற் றொழிலான், உயிரோ டொப்புமையெய்துவது அதுவே யாகலின். நட் பென்பது ஈண்டுக் குறிப்புமொழியாய் நட்பின்றிப் போதலுணர்த்திநின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முள் மாறாகலின், வினைவயத்தாற் கூடியதல்லது, நட்பிலவென்ப தறிக. இனிக் குடம்பையென்பதற்குக் கூடென் றுரைப்பாரு முளர். அது புள்ளுடன் தோன்றாமையானும், அதன்கண் அது மீண்டு புகுதலுடைமையானும், உடம்பிற்கு உவமையாகாமை யறிக."

## ௯. குடம்பை முட்டையாகாமை

'குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்றே' என்ற சொற்றொடரில், குடம்பையானது தன்னைவிட்டு நீங்கிக்கிடப்பப் புள் பறந்த தன்மைபோலும் என்பது. இதில், குடம்பை உவமப்பொருள்; பறத்தல் உவமிக்கப்படும் பொருள். கூர்ந்து நோக்கவேண்டிய பகுதிகள் இவையே. இங்கே காட்டப்பெறும் உவமை, முட்டையில் கருவாகித் தோன்றி வளர்ச்சியடைந்து குஞ்சாகிப் புள் உருவாகி வெளிவருவதைக் குறிப்பதன்று. பறக்கும் தன்மை ஒன்றே.

> "வினைபயன் மெய்யுரு என்ற நான்கே
> வகைபெற வந்த உவமத் தோற்றம்" (தொல், உவம: ௧.)

என்னும் தொல்காப்பிய நூற்பாப் படி, இது வினையுவமம். வினையாவது தொழில்; தொழில்பற்றிய உவமம். ஒன்று செய்யும்போது நிகழும் நிகழ்ச்சியை வேறொரு நிகழ்ச்சியோடு ஒத்திருப்பக் காட்டுவது. என்னை? 'பாம்புபோல் சீறினான்' என்றால், 'பாம்பானது சினம்பொங்கி எழுச்சியுற்றுத் தன்னை எதிர்த்தோரை அச்சுறுத்தி வெருட்டுதல்போல் வெருட்டினான்' என்பதே கொள்ளும் பொருளாய் உவமைகோடற்குரியது. அவ்வாறின்றிப் பாம்புபோல் வாலும் படமும் பொறியும் நாவும் கண்டங்களும் முடங்கலும் கொண்டு நின்றானென்று கொள்ளல், உவமம் ஆகாது. அஃது உவமங்காட்டும் சிறப்புமின்று. ஆகவே, இதை விளக்கத் தொல்காப்பிய உரைகண்ட பேராசிரியர்,

"'புலியன்ன மறவன்' என்பது வினையுவமம்; அது பாயுமாறே பாய்வன் என்னும் தொழில்பற்றி ஒப்பித்தமையின், அற்றன்றித் தோலும் வாலும் காலும் முதலாகிய வடிவும் ஏனைய வண்ணமும் பயனும் ஒவ்வா வென்பது; ஒழிந்தவற்றிற்கும் இஃதொக்கும்," என்று நயம்பட விளக்கு முகத்தான் அறியப்பெறும்.

ஆதலால், பறவையானது தான் வாழ்ந்திருந்த கூட்டை விட்டுப் பறந்துசெல்வதுபோல், உயிரானது, தான் குடியிருந்து வரும் உடலில் தான் இருக்கும் காலம் வரையும் இருந்துவிட்டுச் செல்வதையே குறித்தல்வேண்டும். ஏனெனின், திருவள்ளுவர் தம் செவ்விய நூலில், ஒவ்வொரு சொற்களையும் ஆய்ந்து எடுத்து அவ்வவ் இடங்கட்கேற்பவே பொருத்தி யாப்பமைத்துள்ளனர். அவ்வாறே 'புட் பறந்தற்றே' என்பதில் பறவை பறந்துசென்ற தன்மை யென்பதுவே பொருந்துவதாகும். எவ்வாறெனின், பறவைக்குஞ்சு முட்டையினின்றும் பிறந்து வெளிவந்ததி லிருந்து, தாய்ப்பறவையால் இரையூட்டப்பெற்று வளர்ந்து, உட லில் மயிர்கள் முளைத்து விசைஇறகு வளர்ச்சியுற்றுப் பறக்கும் பருவம் வருந்துணையும் அக்கூட்டிலேயே இருக்கின்றது. அப் பருவம் வந்தவுடன் அதைவிட்டுப் பறந்து சென்றுவிடுகின்றது. அதுபோன்றே உயிரும் உடம்பைவிட்டுச் செல்கின்றது. கூட் டைப் பறவை எப்படித் தனித்துவிட்டுப் போகின்றதோ உயிரும் அதுபோன்றே உடலைவிட்டுச் செல்கின்றது. கூட்டுக்கும் பற வைக்கும் இருக்கும் உறவு, எவ்வாறு உறுதிப்பாடற்றதோ? அவ்வாறே உடலுக்கும் உயிருக்கும் இருக்கும் உறவும் தொடர் பற்றது என்பதைக் குறிக்கவே, 'உடம்பொடு உயிரிடை நட்பு' என்று ஆசிரியர் உணர்த்தியருள்வாராயினர். 'புட்பறந்தற்றே' என்ற சொல்லின் நுட்பத்தையும் ஓர்க.

முட்டையென்று கொண்டால், அவ்வளவு பொருட் சிறப் பின்று. பறவைக்குஞ்சு முட்டையை விட்டு வெளிவந்தவுடன் பறப்பதில்லை. அதிலிருந்து பிறந்த பார்ப்பு, அதன் பக்கத்தில் கிடக்கின்றது. அஃதன்றியும் முட்டை அதில் வளர்ச்சி பெற் றுள்ள குஞ்சியினாலோ, தாய்ப்பறவையினாலோ தகர்க்கப்பட்டுச் சிதைந்தொழிகின்றது. உடலைவிட்டு உயிர் போங்கால் உடல் சிதைக்கப்பெறுவதில்லை. உயிர் போனபின் உடல் கட்டை போல் உணர்வற்றுக் கிடக்கின்றது. ஆகவே, முட்டைக்கு ஒப் புக் காட்டல் ஒவ்வாது. முட்டையோடு பறவையும் ஒன்றாகப் பிறக்கின்றதே யெனின்? நன்று கடாயினாய், முட்டையிற் பிறப் பன பறவையேயன்றிப் பாம்பு பல்லி உடும்பு ஓணான் எறும்பு முதலிய எண்ணிறந்த உயிர்களும் உள்ளன. அவைகளும் முட் டையினுள்ளேயே வளர்ச்சி பெற்றுப் பின் வெளிவருகின்றன.

ஆதலால், அவைகளையும் ஒப்புப் பொருள்களாகக் கோடலா மன்றே. கொள்ளின் பொருத்தமற்றதே. இவ்வுவமத்தில் முதன் மையாகக் கொள்ளக் கிடப்பது, பறத்தலொன்றே யாகலான், முட்டையைக் கொள்ளாது கூட்டைக்கொள்ளலே ஒத்ததாக இருக்கின்றது. இவ்வாறே மணக்குடவரும் பிற்கால தற்கால உரையாசிரியர்களும் கொண்டனர்.

'குடம்பை தனித்தொழிய.......' என்னும் குறட்பாவுக்கு உடம்புக்கும் உயிருக்கும் கூட்டுறவு முறையில் இருக்கும் நட்புத் தன்மை, பறவை தன் கூட்டைத் தான் வேறு கூடு வேறாகப் போகுமாறு விட்டுவிட்டுப் பறந்துபோகும் தன்மையை ஒத்தது என்பதே நேரிய உரையாகின்றது. புள், தான் பிறக்கும்போது தனக்கு இடமாகி இருந்துவந்த கூடு, தனியே கிடப்பப் போட்டு விட்டுக் குஞ்சு வெளியே பறந்து செல்கின்றது. போன அக் குஞ்சுப்பறவை, மீண்டும் அக்கூட்டுக்குள் வந்து குடிபுகுந்து இருப்பதில்லை. பறவைகள் மீண்டும் மீண்டும் ஒரு கூட்டினுள் ளேயே வந்திருந்து வாழ்வதாயின், கூடும் அவை புதிது புதிதா கக் கட்டவேண்டாவன்றோ? பறவைகள் கூடு கட்டுவதன் முதல் நோக்கம், தாம் வாழ்வதற்கன்று. முட்டையிட்டுக் குஞ்சுகள் பொரித்துத் தம் இனத்தைப் பெருக்குதற்கே. மரத்தில்வாழ் பறவை இனங்களும் கரையில்வாழ் பறவை இனங்களும், குஞ்சு கள் பொரித்து வளர்ப்பதற்கே கூடுகள் கட்டுகின்றன. பறவை கள் கூட்டிற்கு அடிக்கடி வருகின்றதே யெனின், தம் குஞ்சு களைப் பார்ப்பதற்கும் இரையூட்டுவதற்குமே அவை வருகின்றன வன்றிப் பிறிதில்லை. தாம் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தற் குரிய பருவமல்லாதபோது தாம் வாழ்வதற்கெனப் பறவைகள் கூடுகள் அமைப்பதில்லை. அவைகள் மரக்கிளைகளினும் தரைகளி னுமே இரவு நேரங்களில் தூங்கிக் காலத்தைக் கழிக்கின்றன. ஆலமரங்கள் கருவேல் வெள்வேல் முதலிய காடுகளாக அடர்ந் துள்ள மரங்களிலும் அவைகள் கூட்டமாக இருந்து பொழுது புலர்ந்ததும் எழுந்து கத்திப் பறந்து செல்வதை நாம் கண்கூடா கக் காண்டுமன்றே.

ஆதலால் 'புள்' என்னும் பறவையைக் குறிக்கும் பொதுச் சொல், ஒன்றொழி பொதுச்சொல்லாகப் பறவைக் குஞ்சையே உணர்த்துமென்க. எனவே, குடம்பை யென்னும் சொல்லுக்கு முட்டையென்று கொள்வதினும் 'கூடு' என்று கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகின்றது.

ஆன்றோர் இலக்கியங்களில் 'குடம்பை' என்னும் இச் சொல், கூட்டைக் குறிக்கவே ஆட்சியில் வந்துள்ளன. அவை

யிற்றுள் ஒருசில, ஈண்டு இலக்கியங்களிலிருந்து எடுத்துக் காட்டுவாம்.

## ௪. குடம்பையென்னும் சொல்வழக்குகள்

குடம்பை யென்னும் சொல் "குடம்பை முட்டையும் கூடுமாகும்," எனப் பிங்கலத்தும் 'குடம்பை - Nest கூடு, Egg முட்டை,' என லெக்சிகன் கமிட்டி அகராதியிலும் வந்துள்ளது. ஆனால் குடம்பை என்பது முட்டையென்னும் பெயராகக் குறிப்பதற்கு இவைகளுள் வந்துள்ளனவேயன்றி, முட்டையைக் குறிக்கும் வழக்காக அச்சொல் ஆட்சிகொள்ளப் பெறவில்லை.

நற்றிணையில், ஒரு தலைவி 'அன்றிற் குரல் கேட்டு இரவு முழுதும் தூங்காது இருக்கின்றாள்' என்று கூறுமிடத்து அவ்வாசிரியர்,

"வடந்தை துவலை தூவிக் குடம்பைப்
பெடைபுணர் அன்றில் இயங்குகுரல் அளைஇக்
கங்குலும் கையறவு தந்தன்று" (நற்: கருஉ)

எனவும்,

"வண்புறப் புறவின் செங்காற் சேவல்
களரி ஓங்கிய கவைமுட் கள்ளி
முளரியங் குடம்பை ஈன்றிளைப் பட்ட
வயவுநடைப் பேடை உணீஇய மன்னர்
முனைகவர் முதுபாழ் உகுநெற் பெறூஉம்" (நற்: ௩௪௪)

எனவும்,

கொங்குவேள் தாம் ஆக்கியருளிய பெருங்கதையுள், மாலைப்பொழுதின் வரவைக் கூறுங்கால்,

"குடம்பை சேர்ந்து குரல்விளி பயிற்றிப்
புட்புலம் புறுத்த புன்கண் மாலை" (பெருங், க-௪௮:௫௬-௭)

எனவும்,

"புள்ளினம் குடம்பை சேரப் புல்லென
அம்புறு புண்ணின் அந்திவந் திறுப்ப" (பெருங்,க-௫௪:௪௫-௬)

எனவும்,

புறநானூற்றில் சிட்டுக்குருவிகள் தம் கூடுகளில் இருந்து வாழ்வதாகக் குறிப்பிடுமிடத்து,

" மனையுறை குரீஇக் கறையணற் சேவல்
பாணர் நரம்பின் சுகிரொடு வயமான்
குரற்செய் பீலியின் இழைத்த குடம்பைப்
பெருஞ்செய் நெல்லின் அரிசி ஆய்ந்துதன்
புன்புறப் பெடையொடு வதியும்" (புறம்: ௩௧௮)

எனவும்,

ஐங்குறு நூற்றில் வயலில் கூடு கட்டிக்கொண்டு இருக்கும் 'முயிறு' என்னும் ஒருவகை எறும்புகளின் கூட்டை நெற்கதிர்களோடு எருமை மாடுகள் மிதித்து உழக்கும் என்று கூறுமிடத்து,

" பழனப் பாகன் முயிறுமூசு குடம்பை
கழனி எருமை கதிரொடு மயக்கும்" (ஐங்குறு: ௯௯)

எனவும்,

குறுந்தொகையில் மனையில் இருந்துவாழும் அன்றிற்பறவையைக் கூறுங்கால்,

" முழவுமுதல் அரைய தடவுநிலைப் பெண்ணைக்
கொழுமடல் இழைத்த சிறுகோற் குடம்பைக்
கருங்கால் அன்றில்" (குறுந்: ௩௦௧)

எனவும்,

அகநானூற்றில் சேவலோடு சேராது முனிந்து நின்ற அன்றிற் பேட்டின் தன்மையை விளக்குங்கால்,

" கடவுள் மரத்த முள்மிடை குடம்பைச்
சேவலொடு புணராச் சிறுகரும் பேடை" (அகம்: ௨௭0)

எனவும்,

" பறவைகள் குடம்பைக் கண்ணே நின்று ஆரவாரிக்கையினாலே"
(குறிஞ்சிப், நச்: உரை: ௨௨௮)

எனவும்,

நீர்வாழ் பறவையான அன்னங்கள் ஆணும் பெண்ணும் சேர்ந்து சென்ற காட்சியைக் காட்டவந்த விடத்துத் திருவிளையாடற் புராணத்துள்,

" பள்ள நீர்குடைந் தஞ்சிறைப் பாசிபோர்த் தெழுந்த
வெள்ளை அன்னத்தைக் காரன மெனப்பெடை வீழ்ந்த
உள்ள மீட்டல மரச்சிற குதறியுள் ளன்பு
கொள்ள ஆசையின் தழீஇக்கொடு குடம்பைசென் றணையும்"
(பரஞ், திருவிளை, நகரப்: ௬௨)

எனவும், வருவன கொண்டு தெளிவுறும்.

இஸ்லாம் வழியைக் கண்டு நிறுவிய மகம்மது நபியின் வரலாறு கூறும் நூலாகிய சீறாப்புராணத்தில் ஒரு வேடன் மானைப் பிடித்துக் கொன்று தின்ன வலையில் போட்டுக்கொண்டு வந்தான்; அதை நபியடிகள் கண்டு இரங்கி அதன் உயிரைக் காத்து விடுபடச் செய்தார். அப்போது பறவைகள் கூட்டில் நுழைகின்ற தன்மையை, அந் நூலாசிரியர் தற்குறிப்பேற்ற அணியாகக் குறிக்குமிடத்து,

> " குலத்தொடும் பறவை தத்தம் குடம்பையிற் புகுதல் மானை
> நிலத்திடைக் கிடத்திக் கட்டி நின்றவேட் டுவனைக் கண்ணால்
> நலத்தொடும் காண்ப தாகா தெனநடு நடுங்கி யுள்ளம்
> உலைத்தறப் பெடையி னோடும் ஒளிப்பன போன்ற தன்றே"
>
> (சீறாப்புராணம்: நுபுவ், மானுக்கு: க௪)

எனப் பறவைகள் வாழும் கூட்டைக் குடம்பை என்றே குறித்தல் தெளிக.

குமரகுருபர அடிகள் தாம் இயற்றியருளிய சிதம்பர மும்மணிக் கோவையுள் காமனைப் பறவையாகவும் அவன் ஏறிவரும் தென்றல்தேரை அப்பறவை வாழும் கூடாகவும் உருவக அணியாக்கிக் கூறுமிடத்து,

> " கால்தேர்க் குடம்பைக் காமப்புட் படுக்கத்
> தீப்பொறி வைத்த திருநுதற் கண்ண "
>
> (சிதம்பர மும், க௪: ௬-எ)

எனப் பறவைக்கூடாகக் குடம்பை என்ற சொல்லால் அழைத்தமை அறிக.

> "செயலார் குடம்பையிற் செந்தலை அன்றில் சினையுளபைங்
> கயலார் வனவெண் குருகின்வண் பார்ப்புள கைக்கடங்கா
> மயலார் களிற்றண்ணல் வாணன்தென் மாறைவை யைத்துறைவா
> வியலா தருளுடை யார்க்கென்று மாமட லேறலவே."
>
> (தஞ்சைவா: க௦௬)

எனக் குடம்பையென்றே கூறியது காண்க.

அம்பிகாபதிக் கோவையில் புள் ஓதிமத்தொடு புலம்பல் என்னும் துறைக்கு அமைத்துள்ள பாட்டுள்,

> "எங்கா தலர்செல்ல என்னை இவ் வாறுகொண் டேகுமவர்
> தங்கா தலரைத் தணந்தறி யார்கொல் மணந்துறையும்
> செங்கானல் ஓதிமங் காள்கருங் கானற் சிறையன்றில்காள்
> உங்கா தலர்சொல்லி னீருடன் போமிக் குடம்பை விட்டே."
>
> (அம்பிகா: உகரு)

எனக் குடம்பை யென்றே கூறியுள்ளமை அறிக.

இன்னும் குடம்பை என்னும் சொல் பலப்பல முற்கால பிற்கால இலக்கியங்களில் பரந்து கிடப்பதை ஆய்வாளர் காணலாம்.

## ரு. முடிபுரை

எனவே, இதுகாறும் ஆய்ந்தவாற்றால் குடம்பை என்னுஞ் சொல், கூட்டைக் குறிக்க வந்துள்ளனவே தவிர, முட்டையைக் குறிக்கக் கண்டிலம். அஃது முட்டைக்குப் பெயராக இருக்கின்றதேயல்லாது உவமமாக உடலுயிர்ஒன்றாக இருத்தற்கு ஒப்புமையாக வந்துள்ளமை யாண்டும் காண்கிலம். அஃதோடு குடம்பை கூடே யென்பதற்கும் அதனுள் இருக்கும் பறவை, உயிர்போல் அமைந்துள்ளதென்பதற்கும் இக்குறட்கு விரிவுரைபோல் அகநானூற்றுப் பாடலொன்றும் நாலடியார்ப் பாடலொன்றும் அமைந்து பொருள் தருகின்றன. அவைகளையும் ஈண்டுப் பொருத்திக் காட்டி இக்கட்டுரையை முற்றுவிப்பாம். அவை :

"பரா அரை............
அலங்கல் அஞ்சினைக் குடம்பை புல்லெனப்
புலம்பெயர் மருங்கில் புள்எழுந் தாங்கு
மெய்யிவண் ஒழியப் போகியவர்
செய்வினை மருங்கிற் செலீ இயர்என் உயிரே." (அகம் : ககரு)

என, இதிற் பொருள்வயிற் பிரிந்த தன் காதலன் பிரிவிற்குக் கலங்கிய காதலி, தன் தோழியிடத்துத் தன் உயிர், 'காதலனைக் காணச் செல்வதாக,' என்று சொல்லுமிடத்து 'புள் எழுந் தாங்கு' என்று கூட்டைவிட்டுச் செல்லும் புள்ளையே தன் உயிருக்கு ஒப்புரைத்துக் கூறுவதாக அமைத்துள்ளமை காண்க.

இனி நாலடியாரில்,

"கேளாதே வந்து கிளைகளாய் இல்தோன்றி
வாளாதே போவரால் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனொழியச் சேண்நீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து." (நாலடியார் : ரு0)

என, 'மக்களும் மற்ற உயிர்களும் உலகில் பிறக்கும்போது ஒருவரையும் கேட்காமல் தாமே வந்து பிறந்து, இறக்கும்போது ஒருவரிடமும் விடைபெறாமல் தாமே இறந்துபோய் விடுகின்றனர். அச்செயல் எதுபோல எனின்? தான் வாழ்ந்திருந்து வந்த கூடு, மரத்தினிடத்தேயே தங்கிக் கிடப்பத் தான் இனித் தங்காமல், வானத்தை நோக்கிப் பறந்துசெல்லும் பறவைபோல,

தம் உடலைத் தம் உறவினரிடம் விட்டு விட்டு,' என்று உவமங் காட்டிச் செல்லுதலும் அறிக.

இப்பாட்டில் மட்டும் 'குடம்பை' என்னும் சொல்லால் குறிக்கவில்லை. அது 'சேக்கை' என்னும் சொல்லால் அமைக்கப் பெற்றுள்ளது. அதுவும் 'கூடு' என்னும் பொருள் தருவதே.

அஃதன்றியும் உடம்பைக் குறிப்பதற்கு உலக வழக்கில் மக்கள் பேசுங்கால் 'என்றைக்கு என் கூடு அழியுமோ' என்றும் 'கூடுவிட்டுக் கூடு பாய்தல்' என்னும் வழக்கும், 'கூடு விட்டு இங்கு ஆவிதான் போயின பின்' என்னும் ஔவையார் திருமொழியும் 'கூடு' என்ற சொல்லை உலகவழக்காக உடலைக் குறிக்க வழங்குதலையும், அஃது உடலுக்கே பெயராக அமைவு பெற்றுளளதையும் காணலாம்.

ஆகலான், குடம்பை என்னுஞ் சொல், கூடேயாம் என்பதூஉம், அச்சொல் கூட்டையே குறிக்குமென்பதூஉம், 'பறந் தற்றே' என்னுஞ் சொல்லும் பறந்து செல்லும் தொழிலைக் குறிக்க அமைந்ததேயாமென்பதூஉம், ஆதலால் இஃது தொழில் உவமம் பற்றி அமைந்ததென்பதூஉம், இவ் அடிப்படையிலேயே அகநானூறு, நாலடியார்ப் பாட்டுக் கருத்துக்கள், இக்குறட்பா வின் நுண்பொருட்கு உரைபோல் பொருந்தியுள்ளனவென் பதூஉம் தெளிவுறுகின்றதன்றே? இதுகாறும் ஆய்ந்தவாற்றால் 'குடம்பை' என்னும் சொல் 'கூட்'டினையே குறிக்கின்றதென் பதை ஒருவாற்றால் விளக்கிக் காட்டினும்.

ஆகவே, குடம்பை யென்பதற்கும் இக்குறட்பாவுக்கும் இங்குக் காட்டியவாறே பொருள்கொள்ளப் பெறுதலே ஏற் புடைத்து. இதனினும் சிறந்த பொருட்பயன் முட்டை வாயி லாக வைத்து அறிஞர்களால் காட்டப்பெறுமேல், அஃது மலை நிலையினும் மாணப்பெரிதாகத் தலைமேற்கொண்டு அவர்களைப் போற்றுவாம்; வாழ்த்துவாம்.

**வாழ்க வள்ளுவர் ; வாழ்க வள்ளுவப் பயன்.**

# சிறுமியின் இலக்கியச் சிந்தனை

[செல்வி, எஸ். கமலாதேவி, இரத்தினபுரி]

தமிழ் தழீஇய சாயலின் தையலாய்,

வணக்கம். கடல்கடந்து வந்த கன்னித்தமிழ் எனும் நின் பொன்னனைய முடங்கல் என்னனையாருக்கு இன்னமுதம் போன்றதென்பேன். "இருந்தமிழே உன்னால் இருந்தேன். இமையோர், விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்," எனும் இலக்கியத் தொடர் என் மனத்து ஊடுருவப் பாய்ந்து செலற்கு நின்போன்ற இலக்கியச் சிந்தனையில் திளைக்கும் ஔவை நல்லாரும் காக்கை பாடினியரும் இலங்கித் தேமதுரத் தமிழோசையினைத் தாய்நாட்டிலன்றிச் சேய்நாட்டினுக்கும் கைவண்ணத்தாலும், வாய் வண்ணத்தாலும் வகுக்கும் தன்மையே சாலும் என்னல் மிகையன்று.

> "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
> அதனின் அதனின் இலன்"

இக்குறளில் 'யாதனின்' என இடையில் அன் சாரியை பெற்றிருப்பதே பொருத்தமாகும். அதன் காரணம் பின்வருமாறு:— குற்றியலுகரங்கள் புணர்ச்சியில் பொதுவாக இன் சாரியை பெறும்.

> "குற்றிய லுகரத் திறுதி முன்னர்
> முற்றத் தோன்றும் இன்னென் சாரியை."

(தொல். எழுத்து: 195)

எனினும் 'யாது' என்னும் வினாப் பற்றிய நெடிற்றொடர்க் குற்றியலுகரம் 'அன்' சாரியைதான் பெறும் என்பது சிறப்பு விதி.

> "யாதெ னிறுதியுஞ் சுட்டுமுத லாகிய
> ஆய்த விறுதியும் அன்னொடு சிவணும்." (தொல். எழுத்து: 200)

இந்நூற்பாவின்படி, 'யாது' என்னும் வினாப்பெயர் உருபேற்குங்காலை, யாதனை, யாதனால், யாதனின், என்றவாறு அன் சாரியைப் பெற்று வருதலைக் காணலாம்.

'யாதினின்' என, இன் சாரியை பெறும் என்று கொள்வதற்கு ஒரு விதித் தடையும் உண்டு. இன் உருபு புணரும் போது இன் சாரியை இயைதலில்லை என்பது. அவ்விதி,

" இன்னென வரூஉம் வேற்றுமை உருபிற்கு
இன்னென் சாரியை யின்மை வேண்டும்."
(தொல். எழுத்து: 131)

இனைய உடன்பாட்டு எதிர்மறை முகங்களால் குறளில் உள்ளாங்கு 'யாதனின்' என்பதே முற்றிய பொருத்தமாகும். வேறுவகையிற் காணப்படின் அது பிழையெனத் துணிதல் சாலும்...............

இதுபோன்ற தமிழ் இலக்கிய ஐயங்கள் எழுமேல் எனக்கு வரையலாம்.

"நன்றி...................
நின் தோழி.................. ........"

எனும் நின் செந்தமிழ் ஓவியம் என்னைக் காவியக் கடலுள் ஆழ்த்திவிடுகின்றது. சில யாண்டுகளின் முன்னர், நன்னூலினுக்கு வகுக்கப்பெற்ற விருத்தியுரைகள் அனைத்தையும் தெரிந்து கொள்வது நல்லறிவு பயத்தல் மெய்ம்மை என்றமை உள்ளி மேற்கொண்டு அப்பணியில் ஈடுபட்டேன். விருத்தியுரை வரைந்த இலக்கண வள்ளல்களுள் முகவை இராமானுசக் கவிராயர் ஒருவர் என்றல் மிகையன்று என்கை அஃகி அகன்ற அறிவொடும் நுண்மாண் நுழைபுலனொடும் இலக்கணத் தூய்மைபெற விழைவார் யாவரும் அறிவர். அவ்வாசிரியர் "ஒரு பொருட் பன்மொழி சிறப்பினின் வழா" என்ற நூற்பாவினுக்கு விருத்தியுரை வரையுங்கால் ஆசிரியர் தொல்சாப்பியனார் இன் உருபிற்கு இன்சாரியை ஒரோவழி யக்காலத்தும் வரும் என்பது கருதியே "இன் என் சாரியை இல்லை யாண்டும்" என நியதிகூறாமல் "இன்மை வேண்டும்" என வேண்டிக்கோடலாயும் பராமுகமாயும் கூறினர். "யாதினின் யாதினின் நீங்கியா னோதல், அதனின் அதனின் இலன்" என்னுமசெய்யுளையும் நோக்கி இந்நூலாசிரியர் (பவணந்தியார்) "சிறப்பின் வழா" எனச் சூத்திரம் செய்தார்... ....................இனி,

" எல்லா வீற்றும் சொல்லுங் காலை
வேற்றுமை யுருபிற்கு இன்னே சாரியை"
(இலக்கணவிளக்கம்)

என்றதை மறந்து பாட்டின் பொருள் என்பதை பாட்டன் பொருள் என்றாற்போல மேற்சொல்லிய குறளை யாதனின் யாதனின் எனத் திருப்பிச் சொல்லின்பம் கெடச்செய்தாருமுளர்—எனப்பெறும இச் சொற்றொடர்களே யான் அன்று விடுத்த ஐயத்தினை எழுப்பின.

இலக்கண விளக்கம் பிற்கால நூலாகலின் தொல்காப்பியக் கருத்தினுக்குச் சிறிது மாறுபட்டிருக்கலாம். இலக்கியவுலகின் இவ்விருபெருஞ்சிகரங்களின் கருத்தினை ஆய்தல் மாண்புடையார் கடன். தமிழ் இலக்கிய இலக்கண நூற்களை மொழியின் திற னடையும் விருப்பொடும் பருகுவன் அன்ன ஆர்வத்தினொடும் பயிலுவாருக்கு எழும் ஐயங்கள் எண்ணிலாதன. அந்நிலையில் நின்போன்ற என்றும் செந்தமிழ் நீர் நல்கும் வற்றாத ஊற்றி னைத் தெரிந்துகொண்டமை என் பெரும்பேறு. சங்ககால நூற் கள் என்றதும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு என்பன நம் மனக்கண்முன் தோன்றி மறைதல் இயற் கையாகும். இன்னும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் அக் காலத்தனவென்றே அறையும் அறிஞருமுளர். இவற்றுள் பரி பாடலில் முதற்பாடல் அராகவரிகள் 14—25 வரை சீர் பிரித்த லின்றி பதிப்பிக்கப்பெற்றுள்ளன. அவற்றைப் பிரித்தறியும்நாள் எந்நாளோ? திருமுருகாற்றுப்படையின்—"பெறலரும் பரி சில் நல்கும் மதி"—என்ற அடியிலமைந்த 'மதி' எனும இடைச் சொல் தொல்காப்பிய வரன்முறைக்கு மீறியதன்றோ?

"மியா இக மோ மதி இகும் சின் என்னும்,
ஆவயின் ஆறும் முன்னிலை யசைச்சொல்."
(சொல்-இடையியல்-26.)

இங்கு உரை கூற வந்த நச்சினார்க்கினியர் மதியை அறிவாக்கிப் பல அறிவுடனே நீ ஒருவனேயாகப் பரிசில் நல்கும், என்று கூறலாமென்கிறார். திருமுருகாற்றுப்படை சங்ககாலத்திய இலக்கணத்தை அடிப்படையாகக்கொண்ட நூலாயின் அதன் அரும்பெறலாசிரியர், பெரும்பெறற்றமிழாசிரியராயின்—அமுதமுண்ட அவிர்சடைக் கடவுளை உரையிழந்து விழிக்கச் செய்த இலக்கணவல்லுநராயின், மதி முன்னிலையிடைச்சொல் என்பதை மறந்து படர்க்கையினதாக்கினமை என்கொலோ அறியேன் தோழி!

" முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇ" (குறுந்தொகை-167.)

இச்செய்யுளிற்கு உரைவளம்வகுத்த தமிழ்ப்பொழில் திரு. உ. வே. சாமிநாதையரவர்கள் கழுவுறு கலிங்கம் என்ற சொற் றொடரினுக்கு, (விரலினை) துடைத்துக்கொண்ட ஆடையை என்று எழுதவும், இந்நாள் வெளிப்போந்த சங்க இலக்கிய இன் கவித்திரட்டு என்ற நூலில், இளவழகனார் கழுவுறு என்பதில் கழுவுதலைப் பகுதியாக்கொண்டு கழுவபபெற்ற ஆடையை—தூய்மையான ஆடையை—என்று வரைகின்றார். இங்கு எப்

பொருள் சிறக்குமெனச் செப்புவாயோ என் செந்தமிழ்த் தோழி?

"யாயும் ஞாயும் யாரா கியரோ
..................................
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே"

(குறுந்தொகை - 40.)

இவண் திரு. ஐயரவர்கள் "செம்மண் நிலத்தின்கண்ணே பெய்த மழைநீர் அம்மண்ணோடு கலந்து அதன் தன்மையை அடைதல்போல அன்புடைய நம் நெஞ்சம் தாமாகவே ஒன்று பட்டன" உன்று உரைவரைந்திருக்கவும் அறிஞர் நாவலர் திரு. ச. சோமசுந்தர பாரதியார் M A , B L., அவர்கள் சில புதிய நயங்களை நவில்கின்றமை இலக்கிய விருப்பினர் அறிந்துகோடல் இன்றியமையாததாகும். "செம்மண்ணோடு மழைநீர் கலந்து அதன் (செம்மண்ணின்) தன்மையை அடைதல், கலப்பால் நீரடைந்த மாறுதலைக் குறிக்கும். எனவே, நீருக்கு மாறுதல் கலப்பால் ஏற்பட்டது. ஆனால் மண்ணடைந்த மாறுதலை உவமை குறிப்பதாக இல்லையே? உவமேயத்தில் தலைவன் நெஞ்சம் மட்டும் சுட்டாமல், "தாம் கலந்தன" என்று தலைவியும் தலைவன் தானும் ஒப்பக் கலந்தெய்திய நிலை கூறப்படுகிறது. ஆனால், கலந்த இருபொருளும், கலப்பால் புதுநிலை எய்துதலும், அந்நிலை இரண்டற்கும் ஒத்திருத்தலும் உவமையில் இருத்தல்வேண்டும். ஐயரவர்கள் உரை, அப்புதுமைப் பொதுமையைக் குறிக்கவும் விளக்கவுமில்லை—ஆகலின், சமநிலத்தில் பெய்யும் மழைநீர்த் தாரைகள் முன்தொடர்பின்றி வேறிடங்களில் வீழினும் நிலத்தின் சம இயல்பால் ஒன்றையொன்று நெருங்கி இரண்டறக் கலந்து ஒன்றுபடும்: அதுபோல, வேறு தொடர்பும் இல்லாத நாம் பாலியல்பால் கூடி நெஞ்சொருப்பட்டுச் சேர்ந்தோம். இனிப்பிரிதலும் நமக்கில்லை—(கலைக்கதிர்-ஆடி இதழ்-பக்கம் 36.) ஐயர் 'செம்புலம்' என்றதைச் 'செம்மண்' எனக் கூறவும், நாவலர் 'செவ்விய சமநிலம்' என்று பகரவும் செய்தால் 'மிகச் சிறந்த பேராசிரிய—வுரை என்சொலுமோ என அறிய விழைகின்றுயல்லையோ அன்னாய்?

கற்றறிந்தாரேத்தும் கலித்தொகையும் சங்க இலக்கிய மன்றோ?

"ஆய்நுத லணிகூந்த லம்பணைத் தடமென்றோள்
தேனூறு கதுப்பினாய் யாதுமொன் றேத்தகு
வேய்நரல் விடரக நீயொன்று பாடித்தை"

(குறிஞ்சிக்கலி - 4.)

பாடித்தை என்ற சொல்லிலமைத்த விகுதியைப்பற்றி—தொல்காப்பிய இடைஇயலில் ஆசிரியர் என்ன கூறுகிறார்? கலித்தொகைக்கும் பாரத் தொல்காப்பியத்திற்கும் இவ்வளவு தானு தொடர்பு என்றால் மங்கலச்செல்வி மன்னிப்பாயோ?

"செலியர் அத்தை நின் வெகுளி" (புறம்-6.)

"செல்வ லத்தை யானே" (புறம்-166.)

இவைபோன்ற சான்றுகள் எண்ணிலாதன.

பதினெண்கீழ்க்கணக்கு நூற்களுள் கைந்நிலையும் இன்னிலையும் தனித்தனி நூற்கள் எனில் அவ்வெண் பதினெட்டே ஆவது எங்ஙனம்? திருக்குறளும் நாலடியாரும் ஏன் அவற்றுள் சேர்க்கப்பெற்றன? திருக்குறட்காலமும் சமணர்காலமும் வேறு என்றமை நம்புதல் ஒண்ணுதோ என ஒண்ணுதலாய் உரைப்பாயாக! சிலப்பதிகாரத்தைப்பற்றிய சில குறிப்புகளை யான் வெளியிட எண்ணுவேன். "யான்" எனும் அழகிய சங்க இலக்கியச் சொல் சிலப்பதிகாரத்துப் பெரும்பான்மையும் "நான்" என மருவியதுபோலும்! பார்ப்பனியும் கீரிப்பிள்ளையும் பற்றிய வரலாறு பிற்காலத்ததன்றோ? சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளைப்பற்றிப் பதிற்றுப்பத்து ஓரிடத்தேனும் ஓதாது ஒழிந்தமையின் மாயம் என்கொல்? பதிகக் கருத்துகள் முரண்படுவதென்னே? என இன்னோரன்னவை இலக்கியச் சிற்பிகள் எனும் திரு. மார்க்கபந்து சர்மா M. A., அவர்களும், திரு. வையாபுரிப்பிள்ளை B.A., B.L., அவர்களும் வரைந்த நூற்களிற் காண்கின்றேன். இறையனுர களவியலில் வரலாற்று உண்மை நிறையாது போயினமை பெயர்ப் பொருத்தந்தானே? களவியல் கற்பியல் எனும் இயல்கள் மட்டும் பொருள்இலக்கணமெனின் தொல்காப்பியத்து ஒன்பது இயல்கள் ஏன் தோன்றுகின்றன? நக்கீரர் உரை உதவினுராயின் அவரது பின்னோரின் பெயர்களை எந்த ஞானக்கண்ணினுல் கண்டனரோ அறியேம். கி. பி. எட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தாரெனப் படும் நெடுமாறன் எனும் பாண்டியன் மீதியற்றப்பட்ட தஞ்சை வாணன் கோவையின் **315** கலித்துறைகள் களவியல் உரையில் புகுந்தனவாயின் சிலபல காலவரையறை ஐயங்கள் எழுதல் இயற்கையன்றோ?

"கால மென்பது கறங்குபோற் சுழன்று
மேலது கீழா கீழது மேலா"

மாறிடும் தன்மையதாயின் கம்பன் கன்னிநறுஞ்சோலையுள் நுழைவோம். சிறை இருந்த சீதை எனும் செல்வி, "இந்தப்

பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன் என்ற செவ் வரம், தந்த" நாயகன் முன்னிலையில், அக்கினியை நோக்கி,

"மனத்தினால் வாக்கினால் மறுவுற்றேன் எனில்
சினத்தினாற் சுடுதியால் தீச்செல்வா"

என்று கூறும் நிலையில் "யாக்கையால்" என்னல் வேண் டாவோ? ஒருகால் "தீண்டுவான் எனில் இத்தனைச் சேண்பகல், ஈண்டுமோ உயிர்..................நிலம், கீண்டெழுந்து ஏகினன் கீழ் மையான்"—என்ற செய்யுளை யாம் அறிவோம் என்று கவி நயம் கமழும் கம்பன் கருதியிருக்கவேண்டும்?

"நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேன் அல்லேன்" என்றமையே சிறப்புறு நயமுடையது என்கிறார் என் இலக்கிய ஆசிரியை. ஆம்; "தவஞ்செய்த தவமாம் தையலைக் கண்டால் அது பெருமையின் மேம்படாதோ? தாங்கள், தான் எனும் இரு சொற்களும் தமிழறிவு சான்ற பெரியார்களால் நீர்—நீவிர்—நீயிர்—நீ என்ற பொருளில் ஆளப்படுகின்றன. இலக்கணவரம் பின் வண்ணம் அப்பொருள் கோடல் மன்னிக்க முடியாத தவறு எனவும், அப்பொருளில் இலக்கண இலக்கியங்களில் சான்றுகள் இல்லை என்றும் வித்துவான் மே வேணுகோபால் பிள்ளை அவர் கள் காஞ்சிமா நகரினின்றும் வரைந்துள்ளார்கள். ஒன்பது பத்து தொண்ணூறுகலாம் என்று நன்னூலார் கூறுவது பொருந்துமா றெங்ஙனம? பரிபாடலில் "ஒன்றென..................எட்டென தொண்டு என"......என்ற அடிகள் அமையுமாயின் 'தொண்டு' என்ற சொல்லிலிருந்து தொண்ணூறு தோன்றியிருக்கலாம். ஆகலின், தமிழறிவு சான்ற தகைசால் தோழி! இவைபோன்ற எண்ணற்ற ஐயங்கள் தமிழ் மாணவ மாணவியரிடை எழுகின் றன. பொறுமையும் புலமையும் பொருந்துவனவாயின் உள் ளொளி எழலாம். நவில்தொறும் நூல்நயம் உண்டு. ஆகலின் பயின்று பண்படையவேண்டும். கவலைகொண்டார் நெஞ்சமும் துணைபிரிந்தார் உள்ளமும் இனிய தமிழினால், மாலைமலரும் மதி யம் என்ன இன்னொளி வீசி இன்புற்று இலங்கலாம்.

வணக்கம்

நின் இலக்கியச்செல்வி

# தொல்காப்பியத்தின் பழமை

[வித்துவான், திரு. ந. சண்முகசுந்தரன், 'திருவதிகை]

தொல்காப்பியம் ஓர் பழந்தமிழ்நூல். அது தமிழர்களின் வாழ்க்கை வரலாற்றுநூல் என்றுங் கூறலாம். தொல்காப்பியரால் இயற்றப்பட்டதால் தொல்காப்பியம் எனப்பட்டது. தொல்காப்பியரின் காலத்தைப்பற்றி ஆராய்வதற்கு அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் உள்ளன. இவைகள் இருந்தும் ஒரு சில ஆசிரியர்கள் வேறுபாடாகக் கருதி பிறழ்கின்றனர். இவ்விடத்துப் பல ஆசிரியர்களின் கருத்தை ஆராய்வாம்.

தொல்காப்பியரின் ஒரு சாலை மாணவரும், சிறப்புப்பாயிரங் கூறினவருமாகிய ஆசிரியர் பனம்பாரனார், தம் பாயிரத்தில் நிலந்தரு திருவின் பாண்டியன் அவைக்களத்துத் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது என்றும், அக்காலத்துத் தமிழக எல்லை "வடவேங்கடந் தென்குமரி" என்றும் கூறியுள்ளார்.

ஆசிரியர் துடிசைக்கிழார். அ. சிதம்பரனார் அவர்கள், தாம் இயற்றிய "தமிழ்ச்சங்கங்களின் வரலாறு" என்ற நூலில் தலைச்சங்கத்தின் காலமும், இடைச்சங்கத்தின் காலமும் மாறுபடக் கூறியுள்ளார்கள். அவர் கூறுவதாவது:—

"முதலூழி இறுதிக்கண் தென்மதுரை அகத்து இருந்த தலைச்சங்கத்து" என்பது காண்க. "ஆதலின், இவ்வரிக்கு முதலூழிக்கு அப்புறம் ஏற்பட்ட தலைச்சங்கம் என்பதே பொருளாகும். அவரே சிலப்பதிகாரம் உரைப்பாயிரத்தில் 'இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்து இடைச்சங்கத்து' என்று கூறுவதால், இடைச்சங்கம் இரண்டாம் ஊழி ஏற்பட்டபின் நிறுவப்பட்டதென்பதே பொருளாம்," என்று கூறியுள்ளார். (தமிழ்ச்சங்க வரலாறு—பக்கம்—62)

முதலூழி என்றால் முதல் கடல்கோளுக்கு முற்பட்ட காலம் என்றும், இரண்டாம் ஊழி என்றால் இரண்டாம்கடல்கோளுக்கு முற்பட்ட காலம் என்றும் கொள்வதுதான் முறை. அதுவே பல ஆசிரியரின் கருத்துமாகும். எடுத்துக்காட்டாக முதல் நூற்றாண்டு இறுதி என்றால் ஒரு நூற்றாண்டு முடிவதற்கு முன் என்பதுதான் பொருள். முதல் நூற்றாண்டு முடிந்த இறுதியல்ல.

ஆசிரியர் துடிசைக்கிழார், அந்நூலில் 55-ம் பக்கம் "குமரிக் கோடும்—குமரியாறும்—தலைச்சங்கம் இருந்த தென்மதுரை

யும் கி. மு. 9564-ல் ஏற்பட்ட கடல்கோளாலே அழிவுற்றன. இதனை உரையாசிரியர் இரண்டாம் ஊழி (=கடல்கோள் என்பர்)" என்று கூறியுள்ளார்.

இவர் கூற்றுப்படி தொல்காப்பியம் கி. மு. 6000-ல் மூன்றும் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்து அரங்கேற்றப்பட்டது என்றும் கூறியுள்ளார். (ப. 71)

எனவே, தொல்காப்பிய காலத்திற்கு முன்பே குமரிக் கோடும் குமரியாறும் அழிந்துவிட்டன என்று கூறியுள்ளார். அப்படியாயின் தொல். பாயிரத்தில் கூறியுள்ள "வடவேங்கடந் தென்குமரி" என்ற சொற்றொடர்க்குப் பொருள் என்னை?

உரையாசிரியர் யாவரும் 'குமரி' என்பதற்கு யாறு என்றே கூறியுள்ளார். மேலே ஆசிரியர் கூற்றுப்படி குமரிக் கோடும், குமரியாறும் அழிந்தபிறகு தொல்காப்பியம் தோன்றிற்று என்று உரையாசிரியர்களின் கருத்தாக இருக்குமானால் 'தென்குமரி' என்றதற்கு கடல் கொள்ளப்பட்ட குமரியாற்றை எல்லையாகக் கூறியிருப்பார்களா? மேலும், தொல்காப்பிய காலத்திற்கு முன்பே கடல்கொண்டதைப் பாயிர ஆசிரியரும் எல்லையாகக் கூறுவாரா? ஆசிரியர் நச்சினார்க்கினியார் சிறப்புப் பாயிர உரையில், "இவையிரண்டும் அகப்பாட்டெல்லையாயின. என்னை? குமரியாற்றின் தெற்கு நாற்பத்தொன்பது நாடு கடல் கொண்டதாகலின்............................வேங்கடமும் குமரியும் யாண்டைய என்றால் வடவேங்கடந் தென்குமரியென வேண்டுதலின் அதனை விளங்கக் கூறினார்" என்று கூறுவதால் தொல்காப்பிய காலத்தில் குமரியாறு அழியாது இருந்ததென்றும், குமரியாற்றின் தெற்கேயுள்ள நாற்பத்தொன்பது நாடுகளும் பஃறுளியாறும் ஆதியூழியில் அழிந்தன என்பதும நனி விளங்கும்

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"

என்ற சிலப்பதிகார அடிகளாலும்,

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்"

என்புழி, உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் உரையாலும் குமரியாறு கடல்கொண்டதாகத் தெரியவில்லை. அக்கடல்கோளால் பஃறுளியாற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடையிலுள்ள நிலப்பகுதியாகிய நாற்பத்தொன்பது நாடுகளும் அழிவுற்றது. இதனையே, உரையாசிரியர் நச்சினார்க்கினியார் பாயிரவுரையில் கூறியுள்ளார். இதுவே முதல்கடல்கோளாகும்.

எனவே, முதல்கடல்கோளுக்குப்பின்பு குமரியாறும் அது தோன்றும் வடபெருங்குமரிக்கோடும் விளங்கிற்று.

ஆகவே, தொல்காப்பியகாலத்தில் குமரியாற்றுக்கும் வடவேங்கடத்திற்கும் இடைப்பட்ட நிலமே தமிழகம். இரண்டாம் ஊழியில்தான் குமரியாறும், வடபெருங் குமரிக்கோடும், தலைநகராகிய கபாடபுரமும் அழிவுற்றன

மற்றும் ஆசிரியர் தூடிசைக்கிழார் அந்நாலில் 55-ம் பக்கம் "குமரிக்கோடும்—குமரியாறும் கி. மு. 9564-ல் ஏற்பட்ட கடல் கோளாலேயே அழிவுற்றன," என்று கூறிவிட்டு பக்கம் 71-ல் "நிலந்தரு திருவிற் பாண்டியன் (கி. மு. 6000) தொல்காப்பியம் புலப்படுத்து இரீஇயினன். அக்காலத்து அவர் நாட்டுக் குமரியின் வடபெருங்கோட்டின் காறும் கடல் கொண்டது," என்று கூறியுள்ளார்.

வடபெருங்கோட்டின் காறும் கடல்கொண்டது என்ற சொற்றொடர்க்குப் பொருள்—வடபெருங்கோடுவரை கடல் கொண்டது என்பதாகும். வடபெருங்கோடு அழியவில்லை. இதுவே, ஆசிரியர் தூடிசைக்கிழார்க்கும் உடன்பாடு என்பது பக்கம் 55ல் "தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின் காறும் கடல் கொண்டொழிந்ததால்," என்று கூறுகிறார். ஆதலால், தெளிந்த நீரையுடைய அகன்ற பரப்பையுடைய குமரியாறும், அது உற்பத்தியாகும் மேருமலையின் வடபெருங்கோடும் அழியவில்லை என்று ஏற்படுகின்றது," என்று கருதலால் நன்று விளங்கும்.

ஆகவே, குமரியாறும், குமரிமலையும் கி. மு. 9564-ல் இரண்டாம் கடல்கோளால் அழிவுற்றன என்று கூறித் தொல்காப்பியத்தின் காலம் கி. மு. 6000 என்று கூறியிருப்பதாலும்; பக்கம் 71-ல் "அக்காலத்து அவர் நாட்டுக் குமரியின் வடபெருங்கோட்டின் காறும் கடல் கொண்டது," என்று கூறுவதாலும் முன்னுக்குப் பின் முரணாகக் காணப்படுகிறது.

**இடைச்சங்கமும் தொல்காப்பியமும் இரண்டாம்கடல்கோளுக்குப்பின் ஏற்பட்டதல்ல.**

முதற்கடல்கோளுக்கு முற்பட்ட தமிழகத்தில் பஃறுளியாறும், குமரியாறும், பேராறும் இவை தோன்றும் குமரிமலையும் வளம்படுத்த நாற்பத்தொன்பது தமிழ்நாடுகளாக விளக்கமுற்றிருந்தன. இது மேலே கூறியவைகளால் விளங்கும். பின் ஆதி ஊழியினால் பஃறுளியாறும், நாற்பத்தொன்பது நாடுகளும் குமரிமலையின் தென்பாகமும் அழிவுற்றன. ஓர் ஊழி நடந்த பிறகு அதன்பின் தொடங்கும் காலப்பகுதியை இரண்டாம் ஊழிக்காலத் தொடக்கம் என்று அழைப்பர். அக்காலத்தில்

தான் இடைச்சங்கமும் தொல்காப்பியமும் தோன்றியிருக்க வேண்டும்.

எவ்வாறெனின் இறையனாரகப்பொருளுரையில் இடைச் சங்கமிருந்த நகர், கபாடபுரமென்றும், இடைச்சங்கத்தார்க்கு நூல் தொல்காப்பியம் என்றும் கூறப்பட்டுள்ளது. அதனுள் முதற்சங்கமிருந்தார்க்கு நூல் தொல்காப்பியம் என்று கூறப் படவில்லை.

மற்றும், தொல்காப்பியப் பாயிரத்தில் குமரியாறே தென் எல்லையாகக் கூறப்பட்டுள்ளது. உரையாசிரியர் நச்சினார்க் கினியர்,

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமு முண்டே"

"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரண மென்ப"

என்னும் சூத்திரங்களின் உரையில் முறையே, "அஃது இரண் டாம் ஊழி தொடங்கி வேளார்க்குத் தவிர்ந்தது," என்றும், "இவ்வாசிரியர் ஆதியூழியின் அந்தத்தே இந்நூல் செய்தலின்," என்றுங் கூறுவதால் ஆதியூழியின் அந்தத்தே செய்து இரண் டாம் ஊழி தொடக்கக் காலத்தில் அரங்கேற்றப்பட்டது, என்று விளங்குகின்றது.

மற்றும், தொல் பாயிரத்தில் "நிலந்தரு திருவிற் பாண்டி யன் அவையத்து," என்று காணப்படுவதால் அப்பாண்டியன் காலத்தே தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது என்று தெரி கிறது. இப்பாண்டியன் கடல்கோட்கு முன்னும் பின்னும் நெடுங்காலமாக அரசாண்டான் என்பது அவனின் சிறப்புப் பெயரால் விளங்கும். அப்பெயர் பாயிரத்துள் காணப்படுவ தால் அங்ஙனம் நிலந்தந்த பேருதவிக்குப் பின்னேயே தொல் காப்பியம் அரங்கேற்றப்பட்டது என்று கொள்ளுதல் இயை புடையதே.

ஏனெனில் கடல்கோள் முடிந்து பிறநாடுகள் கைக்கொள் ளப்பட்டுப் பாண்டியன் அரசு நிலைத்தபிறகே நிலந்தரு திருவிற் பாண்டியன் என்ற பெயர் ஏற்பட்டிருத்தல் வேண்டும். அப் பெயர் சிறப்புப்பாயிரத்தில் காணப்படுதலின் ஆசிரியர் நூல் செய்து அரங்கேறிய காலம் முதற்கடல்கோட்குப் பின்னே யாதல்வேண்டும். இதுவே, ஆசிரியர் திருவாளர் கா. சுப்பிர மணிய பிள்ளை எம். ஏ., எம். எல்., அவர்கட்கும் கருத்தாகும்.

"நிலந்தரு திருவிற் பாண்டியன் தெற்கே பஃறுளியாறு கடல்கோட் படுவதற்கு முன்னும் பின்னும் இருந்தவன் என்ப.

அது தலைச்சங்கத்தின் இறுதிக்காலமும் இடைச்சங்கத்தின் முதற்காலமுமாகும். இடைச்சங்கம் நிலைபெற்றிருந்த 'கபாட புரம்' என்னும் பாண்டியர் தலைநகரம் வான்மீக இராமாயணத் திற் குறிக்கப்பட்டிருத்தலின், பஃறுளியாறு கடல்வாய்ப்பட்ட காலம் திரேதாயுகத்தின் நிகழ்ச்சி எனப்படும் இராமாயண காலத்திற்கு முற்பட்டதாகல் வேண்டும்,'' என்று சைவசித் தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் தொல்காப்பியமூல வெளி யீட்டின் பதிப்புரையில் காணப்படுகிறது. ஆதலால், குறிப்புரை எழுதிய கழகப்புலவர், இளவழகனார் அவர்களுக்கும் இக் கருத்து ஒத்ததாகும்.

டாக்டர், மா. இராசமாணிக்கம் B. O. L , L. T., M. O. L., PH.D. அவர்களும், "ஆராய்ச்சிக் கட்டுரைகள்" என்ற நூலில் 'தமிழ் யாப்பிலக்கண நூல்கள்' என்ற பகுதியில் (பக்கம் 92) "மூன்று சங்கங்கள் இருந்தன என்ற களவியல் கூற்றுக்கு வேறு சான் றில்லை. அக்கூற்றில் முதற்சங்கம் தென் மதுரையில் நடந்தது. அஃது அகத்தியர் காலம். பிறகு அது கடல்கொண்டது. அதன் பின்னர் இரண்டாஞ்சங்கம் அலைவாயிற் (கபாடபுரம்) கூடியது. அப்பொழுது தொல்காப்பியம் செய்யப்பட்டது," என்று கூறியுள்ளார்.

ஆகவே, தொல்காப்பியத்தின் காலமும், அது தோன்றிய இடைச்சங்கத்தின் காலமும் ஆசிரியர் துடிசைக்கிழார், அ. சிதம் பரனார் அவர்களின் கூற்றுகிய இரண்டாம்கடல்கோளுக்குப் பிற்பட்டதென்பது பொருத்தமல்ல. இன்னும், முதலூழி, இரண்டாம் ஊழி என்பதற்குக் கொண்ட பொருளும் மேலே கூறியவைகளால் பொருத்தமல்ல என்பதும் விளங்கும்.

---

## இன்பம்

உலகத்தில் பிறந்துள்ள எல்லா உயிர்களும் தத்தமக்கு இன்பம் ஒன்றையே நாடி அல்லும் பகலும் அலமருகின்றன. அவ் இன்ப மென்பதியாதெனக் கிளப்பின் மனமகிழ்வுக்குரிய யாவும் இன் பத்தின் பாற்பட்டனவேயாம். இவ் இன்பம் கட்டற்று நிற்கும் கனி வுடையது; இன்பம் வேண்டா உயிர் யாண்டுமில்லை ஆகலான், பண்டைத் தண்டமிழ்ப் பெருமகனாராகிய ஆசிரியர் தொல்காப்பியனார் தொல்காப்பியப் பொருளியலில்,

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான்அமர்ந்து வரூஉம் மேவற் றாகும்"
—தொல், பொருளியல்: உக

என்று அதன் நுணுக்கத்தைத் திறம்படக் கிளந்தருள்வாராயினர்.

—சேல்லூர்க்கிழார்.

# மறைந்த மணி

[திரு. தி. வே. நடேசன், அண்ணாமலைநகர்]

(சிலம்பு-௨௯, பரல்-௧, பக்கம்-௫௧. தொடர்ச்சி)

## "செழுமலரே"

வேந்தன் கரிகாற் பெருவளவன் கண்ணெதிரே
ஏந்தெழில் மாதவியைச் சார்ந்த கலைத்திறங் காட்ட
கொம்பனாள் அன்னையக் கொள்கை மனங்கொள்ள
நம்பவோ என்று நகரெங்கும் ஒலிப்பார்
கோடி விளக்கரங்கில் கொள்ளா வொளிவீச
நாடுவோர் தொகையை நாவோ எடுத்துரைக்கும்.
வேந்தனும் வேந்தன் சூழ்வோரும் அவையத்துட்
போந்தமர வாழ்த்தொலிக்கச் சேர்ந்தொலிக்கும் சிலம்பிணையே.
எண்ணில் விளக்கப் பொழிவிடையே யவளாட
மண்ணுளோர் கண்ணவிக்கும் ஒண்ணங்கை யிவளென்று
பண்ணுங் கூத்தும் பான்மையின் இயையத்
தண்ணுமை தூங்கத் தாளம் ஏத்தப்
பண்ணு நடத்தைப் பார்ப்போர்கள் சொல்லவோ
நண்ணார் எண்ணா நலங்கிளர்பூம் பட்டினத்தின்
கைவந்த சிற்பி கண்ணிகந்த பதுமைகளைச்
செய்தந் தேயவையிற் சேர்த்தமர்த்தி விட்டானோ ?
கோவல னோர்பால் கொள்கை யழிந்தவனாய்
நோயி னுழந்து நொந்தே யமர்ந்திருக்கப்
பூபாளம் பாடியவள் பொன்னடியைத் தூக்குகையில்
தீபாய்ந்து நெஞ்சில் தின்றதுவே யவனுணாவை.
நெஞ்சமில் கொலையோனின் நெறிவழுவுந் தூண்டிலிலே
வஞ்ச மறியாக் கயலூச லாடுமென
மாதவிக் கூர்ங்கண் தூண்டின்முள் ளூசலிலே
வேதனை யூக்க விரைந்தாடும் அவன்நெஞ்சம்.
கையின் மெலிவோ, கைவளையின் இன்னொலியோ
மெய்யின் எழிலோ நெளிவோ அவனுடலைச்
செய்யுஞ் சிலையாய் வைய முழுவதுமாய்ப்
பெய்வா யடியில் அவள்என்றாற் பெய்வானே.
பாடிப் பறக்கும் வண்டெனவே கலைமயக்கில்
ஆடித் திரியும் மாதவியின் அலர்க்கண்ணும்
தாவி விழுமால் தழல்கனியுங் கோவலனின்
ஓவியக் கண்வழியுற் றுலைசீறும் உள்ளத்தில்
வீழ்ந்துயிர்த் தெழுந்தவ் வெங்கருங்கண் சோர்வையெலாம்
ஆழ்ந்தறிய முயன்றும் ஆழம் அறியொணாமோ ?
சேர்த்த விழிவாங்காச் செங்கோலின் மன்னவனுங்
கூத்தி னுவந்து கொள்கைவழிப் பூந்தாரும்
தாயின் வழியாய்த் தலைக்கோற் பட்டமொடு

ஆயிரத் தெண்கழஞ் சளித்துச் சிறப்பீயப்
போயினள் மனைக்கே பொன்றும் உணர்வினளே.
கோவலன் நெஞ்சங் கொலையரங்கைச் சூழ்ந்துசில
நாழிகை வலம்வந்து நங்கைமனை தனைநாடும்.
கணிகையள் அன்றோ என்று மனஞ்செலுத்தத்
தணியாக் காதல் தாள்விலங்கிட் டிழுத்தேகப்
பணியே வாழ்வின் துணிவாய்க் கொண்டவளை
அணியை மாதர் மணியை மறந்தானே.
உள்ள உலைத்தீ உடலெங்கும் அனல்தெரிக்க
வெள்ள விசைக்கே யிழுக்கித் துடிப்பானின்
தள்ளா நிலையில் தத்தளிக்க மாதவியின்
கள்ளர் மனைமுன் கால்துவள நின்றனனால்.
கருகும் ஓடதன்மேல் கனலுண்ணு மெள்ளெனவே
பரிய வுயர்ந்த பஞ்சணைபல் மெல்லணைமேல்
வருந்திப் புரண்டு வாள்நுதன்மேல் நீர்சாயப்
பொருந்திக் கிடந்தாளுக் கென்றும் புணர்ந்தறியா
அருத்தி நல்லின்பம் அணிவாயி னின்றுகுத்து
வருத்து நிலையில் வாயிலிலே கோவலனார்
வந்தணைந்து நின்றார் வளமொழியே பணியென்னெனச்
செந்தேன் மொழியாள் சில்லென்னுஞ் செய்திசொலப்
பொங்கு மனத்திற் பொருந்தா மொழிமிழற்றித்
தங்காதல் வாய்த்தண் மொழியே யெனப்பணிக்கக்
கோயிலுள் நுழையுமெய்க் கோவடியான் கொள்கையொடு
ஆயிரம் மீறிய அளவில் நகைமிதந்து
கோயிலுற்றுக் கருப்பக் கூடத்துட் கோவலனுந்
தேவணங் கோடிணைந்து மாவின்பங் கண்டனனால்.
கற்று வளர்ந்து கலைதேர்ந்த பேரழகைப்
புற்று வழக்கம் போர்த்தாது காத்தளித்து
அடையக் கொண்டாய் அணிமார்பில் முடைநாற்றக்
கடையாளர் நடுவே கிடந்தகுல மணியையென''
மாது மவனுங் கோதமையாக் காதலிலே
தாதும் பூவு மென்றே யிசைந்திருப்பக்
கண்டு மகிழ்ந்த கருத்தோங்குந் தோழியவள்
தண்டா விழைவைத் தயங்கிதழால் மொழிந்தனளே.

*  *  *  *

கற்பின் பெருந்திறத்தைக் கண்ணிலர்முன் காட்டுமொளி
வெற்பே! கண்ணகியா மன்னாய்! வேறொருத்தி
கண்கவருஞ் சிறுபாவை கைவைத்து மினுக்குகையில்
தன்அனையின் கையிகந்து தாவிச்செலுங் குழவியென
மாதவியின் மயக்கில் மறையேத்து முந்தன்பாற்
காத லொழிந்த காதலனின் நினைவுணவாய்
வாழும் மக்களிலாப் பாழுரைச் சூழ்ந்தெங்கும்
வேழம் விளைந்தோங்கி வெண்தலையை யசைத்தழைப்பத்
தமிழ்விளையு நெஞ்சத் துத்தழலுங் காதலினைக்
கமழும் மணஞ்சிந்துங் கழல்நெஞ்ச மலர்த்தேனைத்
துய்க்குந் துணைவன் துணைதுறந்து புறந்திரிய
எய்க்கும் இன்னுளத்தில் எஞ்ஞான்றுந் தனதாகத்
தன்னை யுடையான் தக்கவுண வீயாதும்

பொன்னை விளக்குஞ் செந்நிலத்திற் பொறைமீறுந்
துன்ப முணர்ந்தால் துணைகவர்ந்த மாதவிதன்
இன்புயர்ந்த காதல் இடிந்து சரியாதோ?

* * *

பால்நிமிரச் சுரக்கும் பருமுலை யன்னைக்
கோனும் நகர்வாழ் குடியுங் கூடி
மாநகர் வளத்தை மேனின் றளிக்கும்
வான வரசுக் கணிவிழ வெடுப்பார்.
முருக்கிய அமரின் மொய்ம்பற வொழித்துச்
செருக்கிய வடவர் சென்னி தாழ்த்தித்
தருக்கித் தமிழன் தலையென நிமிர்த்திய
கரிகால் வளவன் ஒருபுகழ் காட்டும்
ஒட்டா ரளித்த கொற்றப் பந்தரும்
பட்டி மண்டபமும் தோரண வாயிலும்
என்றிவை தொக்க வென்றி மண்டபத்தும்
மன்ற மைந்தினும் மலர்ப்பலி தூவி
வழுவெலா நீங்க வளம்பல சுரக்கெனக்
கொழுமகிழ் வோடு விழவெடுத் தயர்ந்து
கடன்முழுக் காடவுங் காவிளை யாடவும்
மடநோக்கு மாதரொடும் மகிழ்விளை கிளையொடும்
நகர மாக்கள் நண்ணினர் கானல்
மகரம் விலங்கும் மைத்தடங் கண்ணி
மாதவி கடல்விளை யாடற் காணுங்
காதலின் வேண்டக் காதல் பூண்டோன்
அத்திரி யேறியும் அவனுயிர் பற்றிய
கொத்தலர்க் கொடியாள் பாண்டி லூர்ந்தும்
தண்மையும் ஒண்மையும் நுண்மையும் பயக்கும்
எண்ணில் கலைஞர் இயைந்தொருங் கீண்டி
கண்ணிலி கார்தன் தண்தலை மோதக்
கண்ணீ ருகுக்கும் வண்ணங் கெழுமிய
கழிபெரு மனைகள் பொழிலெழின் மலர்த்தக்
கழியா வோதைப் பொழிற்புள் ளொலிப்பத்
தமிழன் சிறப்பெலாந் தங்குநுண் குதலைச்
சிமிழெனும் புகாரின் வீதியிற் செலுங்கால்
மலிவளப் பரப்பில் மெலிகண் விழித்த
வலியில் மேனி வம்பல னொருவன்
நாட்டின் வனப்பும் விழவின் சிறப்புங்
கோட்டமில் ஒழுக்குங் கொள்கையில் தேர்ந்தோன்
"நாளோ ரேழும் நல்விழ விங்கே
கோளினை யெட்டுங் கொடுந்தீ யங்கே
வாளணி காவல் இங்கே யாங்கோ
வாள்தலை விதைத்தே நாளுண வூட்டும்.
குண்டெனு முடலைக் கோட்டித் தொழிலில்
தண்டென வாக்கியுந் தணலவிந் தறியா
குண்டியழல் மண்டிக் கொதித்துளந் தீய்த்து
அண்டி யறிவை யழித்துயர் கொண்டை
விணைது லங்கு மனையெலாஞ் சூழும்."

(தொ—ரும்.)

# தமிழ் நெடுங்கணக்கு - பெயரும் எண்ணும்

[இராவ்சாகிப், சைவப்புலவர்,
டாக்டர். தி. இரா. அண்ணுமலைப் பிள்ளை
L.C.P.S., L.M.S.S.A. Lond. (குற்றாலம், தென்காசி)]

(செந்தமிழ்ச்செல்வி—சிலம்பு உசு; பரல் உ; கo௨-ம் பக்கத் தொடர்ச்சி)

## விஞ்ஞானச் சான்றுகள்—யாழூங் குழலும்

### ஏழிசையும் புதைபொருள் ஆராய்ச்சியும்

இந்தியாக் கண்டத்தின் பண்டைப் பண்பாட்டை (Culture) நன்கறிந்து விளக்கும்பொருட்டு, மாட்சிமை தங்கிய நம் இந்தியா அரசாங்கத்தார், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, சிறப்புற்று ஓங்கி, பின்னர் அழிந்து மறைந்த பல நகரங்களைத் தோண்டியெடுத்து அவைகளில் அகப்படும் பொருள்களைத் தக்க பேரறிஞர்களைக் கொண்டு சோதித்துப் பார்த்து அவர்கள் உறுதிப்படுத்திய முடிபுகளை வெளியிட்டு வருகின்றனர். தற்காலத்திலும் இத்தகைய ஆராய்ச்சி நடந்து வருகிறது.

நமது இந்தியத்தாயின் வடமேற்கு எல்லையிலுள்ள சிந்து ஆறு வட்டாரங்களிலும் (The Indus) புதைபொருள் ஆராய்ச்சி நடத்தினர். சிந்து ஆறு, தன்னைச் சுற்றியுள்ள பல்லாயிரம் மைல் சுற்றளவுக்குத் தண்ணீர் பாய்ச்சுகின்றது. இந்த ஆறு, வெள்ளப்பெருக்கால், அடிக்கடி, திடீரெனத் தனது போக்கை மாற்றிவிடும் இயல்புடையது. வெள்ளம் பொங்கியெழுந்து வருவதால் ஆற்றின்வழி மாறும்பொழுது, அதன் பக்கத்திலுள்ள நகரங்கள் பல அழிவது இயல்புதானே. இங்ஙனம், மறைந்த நகரங்களில், மொஃகெஞ்சொதாரோ, ஃகரப்பா என்னும் ஊர்களை அகழ்ந்தெடுத்து ஆராய்ந்து கண்ட குறிப்புக்களையும் வெளியிட்டுள்ளார்கள். சர் ஜான் மார்சல் (Sir John Marshall), டாக்டர் மாக்கே (Dr. Mackay), எச். ஃகிரஸ் ஞானியார் சாமி (Rev. H. Heras, S. J.), இவர்கள் போன்ற நுண்புல மிகுந்த பெரும்புலவர்கள் இம்முயற்சியிற் பங்கெடுத்துள்ளார்கள்; தத்தம் கருத்துக்களை பல நூல்களாக எழுதியுமுள்ளார்கள். இதையொட்டிய சில அரிய குறிப்புக்களை இங்கு எடுத்துக்காட்டுவாம்.

மொஃகெஞ்சோதாரோ என்னும் ஊரில், தோண்டிக் கண்டுபிடித்த நாணய முதலியவைகளிற் பொறிக்கப்பட்டுள்ள முத்

திரைச் சித்திரங்கள் (Casts of Seals) பல உள. இவைகளில் ஒன்று "A hand book to the Indian Prehistoric Antiquities" (By S. N. Chakravarti) என்னும் நூலில், 17-ம் பக்கத்தில், விரிவாய் ஆங்கிலத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அஃதென்னையெனின்? இந்தச் சித்திரத்தில், ஒரு அரசமரத்தடியில் (Pipal tree), தலைமீது கொம்புமுளைத்த தெய்வம் ஒன்று காணப்படுகின்றது. இதற்கெதிரே, கொம்புமுளைத்த, மற்றொரு தெய்வம், முழங்கால் படிந்து முதற்கூறிய தெய்வத்தை வணங்குவதுபோலத் தோன்றுகிறது. இந்த இரண்டு தெய்வங்களும் நீளமான சடைகள் உடையனவாய்த் தோன்றுகின்றன....இவைகளின் அடியில், ஏழு (7) மனித உருவங்கள் காணப்படுகின்றன. இவ்வுருவங்கள், தங்கள் தலையில் ஒரு முண்டாசுபோலத் துணியைக் கட்டி யிருப்பதோடு, சடை பின்னித் தொங்கவிட்டிருக்கின்றன. அநேக முத்திரைச் சின்னங்களில், யானை, புலி, எருமை, உச்சிக்கொம்பு விலங்கு, மான், ஏறு, எருது, காண்டாமிருகம், முதலிய விலங்குகளின் உருவங்களும் காணப்படுகின்றன"—"In another cast of a seal (plate vii—7) is depicted a horned Deity in the midst of a pipal tree. Another horned Deity is kneeling and worshipping the former; both wear long plaits of hair...Below are seven Human Figures, wearing a sprig on the head and a long pigtail behind. The majority of the impressions and casts of seals bear a line of pictographs and representations of such animals as the elephant, the tiger, the buffalo, the unicorn, the deer, the homped bull, the short-horned bull, and the rhinoceros.—(Prince of Wales Museum of Western India, Bombay). உண்மைக்கும், தமிழுக்கும் சீரிய தொண்டாற்றிவரும் ஃகீராஸ் முனிவர் (Rev. H. Heras, S. J.), "The plastic representation of God, among the Proto-Indians (published in the Sardesai Commemoration Volume of Kcshav Bhikaji Dhawala, Bombay) என்னும் நுழைபுலமிகுந்த கட்டுரையில், மேற்கூறிய சித்திரத்தின் நுண்ணிய குறிப்புக்களை எடுத்துக் காட்டியுள்ளார். இப்படத்தைக் கூர்ந்து நோக்குவார்க்கு, இதிற்காணும் ஏழு மனித உருவங்களும், ஏழு பெண்தெய்வங்களைக் குறிக்குமென்பது விளங்கும். இவ் ஏழு பெண்ணுருவங்களும், பாவாடை கட்டி, தலையில் முக்காடுபோட்டு ஒரே வரிசையில் நிற்பதிலிருந்து இவர்கள் ஏழு கன்னிகைகளைச் சுட்டுகின்றரென்பது உய்த்துணரலாம். ஆகவே, அரசமரம் இறைவனது படைப்பினால் தோன்றி விளங்கும் பேரண்டத்தையும், கொம்போடு காணப்படும் தெய்வம் எல்லாம்

வல்ல முழுமுதற் கடவுளையும், முழங்காற்படிந்த மற்றொரு தெய்வம் நந்தி அல்லது தென்முகக் கடவுளையும், படத்தின்கீழே காணப்படும் ஏழு உருவங்கள், தன்னின்று பிரிக்கமுடியாத சத்தியின் ஏழு பேதங்களைக் கொண்டு, உயிர்கள்மேல்வைத்த கருணையால் தனது தொழிலை இறைவன் நடத்துகின்றா னென்பதையும் சுட்டி நிற்கின்றது போலும்.

## ஏழு கன்னிகைகள் வணக்கம்

ஏழு கன்னிகையரின் சிலைகள், இன்றும் தென்னிந்தியாவில் அநேக திருக்கோயில்களிற் காணப்படுகின்றன. கோயில்களில் மாத்திரமல்ல ; "காடுங் காவும் கவின்பெறு துருத்தியும், யாறும் குளனும் வேறுபல் வைப்பும், சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும், மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்" என்ற படி நமது நாடு எங்கும், ஏழு கன்னிகைகளைத் தொழுகின்ற வணக்கம் நிரம்பியுள்ளது. (திருநெல்வேலி) திருக்குற்றாலத்துக் கருகேயுள்ள தென்காசியிலே, கன்னிமார் அம்மன் கோவில் தெரு என்றழைக்கப்படும் வீதியே ஒன்றுளது. அவ்வீதியின் நடுவிலிருக்கும் (கன்னிமாரம்மன்) கோவிலில் ஏழுகன்னிகைச் சிலைகள்தான் இன்றும் காணப்படுகின்றன.

மேற்கூறிய மொஃகெஞ்சதாரோ நாணயங்களிற் பல விலங்குகளின் உருவங்கள் காணப்படுவதன் கருத்து என்னையென்று பலவாறு யாம் சிந்தித்ததுண்டு. கலிங்கத்துப் பரணியில் ஏழு கன்னிகைகள் (சத்தமாதர்) துதியை (செந்தமிழ்ச் செல்வி சிலம்-உசா ப-சா0உ-ல் எடுத்துக் காட்டியது) உள்ளத்தில் உள்கி ஓத ஓத, எமக்கு ஒரு குறிப்பு தோன்றியது. பண்டைக்காலத்திலிருந்து நமது சமயத்திற் கூறப்படும் தெய்வீக சத்திகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கொடி அமைக்கப்பட்டுள்ளது. இதைத்தான் கவிஞர் சயங்கொண்டார் "மெல் கொடிகள் ஏழின் ஏழிரு துணைப்பதம் தொழ நினைத்துமே" என்று பாடி வணங்கினர். இந்தக் கொடிகளை, துகில் (Totem) என்றுங் கூறுவர். இத்தகைய கொடிகளில் இன்றும் நாங்காணும் விலங்கு உருவங்களுக்கும், மொகஞ்சதாரோவிற் கண்ட விலங்குகளுக்கும் தொடர்பு உண்டு என கூர்த்தறிய இடந்தருகிறது. இதை விரிவாய் ஆராய்தல் வேண்டும். இங்ஙனமாக, ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய மொஃகெஞ்சதாரோ நாகரிகத்துக்கும், தென்னிந்தியாவில் இன்று நிலவும் பண்பாட்டுக்கும், நெருங்கிய சமயத் தொடர்பு காணப்படுமாயின், அக்காலத்தில் தென்னிந்திய நாகரிகம் நமது இந்தியநாடு முழுவதிலும் பரவியிருந்ததென்று கூறுவதில் என்ன தடை?

## கூத்தரும் ஏழிசையும்

ஓசை அனைத்தும் கூத்தப்பெருமானது (நடேசர்) திருச் சிலம்போசையினின்று எழுந்ததென்றும், சொல்லுலகம் பொருள்உலகம் யாவும், ஓசையினின்றே பிறக்கின்றனவென் றும், இறைவனே ஓசையும் ஒலியுமாயிருக்கின்றானென்றும், அவனே மூல ஒலியாகிய ஓங்காரவடிவமாயிருக்கின்றானென்றும் பல்லாயிரம் ஆண்டுகளாக, நமது முன்னோர் கண்டுணர்ந்த சமயக் கொள்கையாகும். தமிழ் நெடுங்கணக்கு ஓசையையே அடிப் படையாகக்கொண்டது. மூலஓசைகளுக்கெல்லாம் உருவம் அமைத்து, அவைகளை, உயிரெழுத்து, மெய்யெழுத்து, சார் பெழுத்து என்று வகுத்த பெருமை தமிழ்நாட்டிற்குரியது. நம் முன்னோர் தம் வாழ்வின் குறிக்கோளை தமது சமயத்தோடு பொருத்தியே வாழ்ந்து வந்தனர்.

## 'சிவ' என்னும் சொல்லும் 'சிவணுதல்' என்பதன் பொருளும்

தலைவனும் தலைவியும் ஒருவரோடு ஒருவர் இசைதல்தானே அவர்கள் இருவருக்கும் நிகழும் திருமணமாகும். 'இசை' என்னும் சொல், பல நிகழ்ச்சிகள் ஒன்றோடொன்று பொருந்து வது என்னும் குறிப்பைத் தன்னுள் அடக்கியுள்ளது. ஆடலும் பாடலும் பண்ணும் இயைந்து கூடி நிற்றலே நமது பண்டைய இசைக்கலையின் தனிச்சிறப்பாகும். இவ்விதம் இசைந்து பொருந்திய நிகழ்ச்சியை, நம் முன்னோர் "சிவணுதல்" என் றழைத்தனர். 'சிவணுதல்' என்னும் தொழிற்பெயர், 'சிவணு' என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது. தெய்வீகத்தன்மை வாய்ந்த இச்சொல், தொல்காப்பியத்தில், எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றதிகாரத்திலும் விரவிநின்று இலங்குகின் றது. (இருபது இடங்களுக்குமேல் வந்துள்ளது). 'சிவணு' என்னும் சொல், சிகரம், வகரம் என்னும் இரண்டு எழுத்துக் களும் இசைந்து ஒன்றாய்த் தொழிற்படுந் தன்மையைக் குறிக் கும்; ஆதலின் பொருந்துதல் என்னும் பொருளிலேயே பெரும் பாலும் வழங்கப்பட்டு வந்துள்ளது. 'சிவணு' என்னுஞ் சொல்லைப்பற்றி நன்கு ஆராயவேண்டியது நமது கடமையே.

## யாழும் வீணையும்—(Violin)—வயலினும்

இனி, இசைக்கருவிகள் பல இருக்க, தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார், 'குழலினிது யாழினிது' என்று குழலை யும் யாழையும் தனிப்பட எடுத்துக் கூறியதென்னை?

"அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்"

என்பது தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் நஉ-ம் சூ-ம். இங்கு நரம்பு யாழினையும், மறை நூலையும் உணர்த்துகின்றது என்பது நச்சினார்க்கினியர் கூற்று. பண்டைக்காலத்தில் 'யாழ் ஆசிரியர்' என்பது நாரதர் ஒருவரையே குறித்தது. நரம்பில் வல்லுநர் நாரதர். நரம்புக்கும் நாரதருக்கும் சொல்மூலம் ஒன்றாயிருக் குமாவென்று ஆராய்ச்சியாளர் சிந்தித்தல் தகுதியேயாம். நாரத ரது யாழுக்கு ஆயிரம் நரம்புத்தந்திகள் கட்டப்பட்டுள்ளன வென்று இசைநூல்கள் கூறும். நரம்புகளை, இணைநரம்பு, நட்பு நரம்பு, பகைநரம்பென்றெல்லாம் நம் முன்னோர் வகுத்திருந் தனரே. 'யாழ்' என்னுஞ் சொல்லினின்றே வயலின் (Violin) என்னும் சொல் தோன்றியிருக்குமென்று எண்ணுவதற்கு இட முண்டு. வயலின் (Violin) என்னும் சொல்லுக்கும் வீணை என்பதே பொருள். வயலின் (Violin) என்னும் சொல் வயால் (Viol) என்னும் அடிப்படையாகப் பிறந்துள்ளது என்று ஆங்கில அகராதிகள் கூறும். வயால் (Viol) என்ற ஒலிக்கும், 'யாழ்' என்ற ஒலிக்கும், நெருங்கிய தொடர்பு, காணப்படுகிற தென்பது எளிதில் விளங்கும். ழகர ஒற்றை உச்சரிக்க இயலாத வர் இன்றும் உளர்; அவர்கள், 'யாழ்' என்னும் சொல்லை 'யால்' என்று ஒலித்து, பின்னர் 'வயால்' என்று ஒலித்தனர் போலும். பென்சில் (Pencil) என்னும் சொல்லினின்று Pencillin வந்தது போல வயால் (Viol) என்னும் சொல்லிலிருந்து எழுந்தது வயலின் (Violin) என்று சொல்வது பொருத்தந்தானே. அறிவர் முடிவுகட்டுவார்களாக.

## யாழுங் குழலும்

"யாழ்மேற்பாலை இடமுறைமெலிய குழல்மேல் கோடி வல முறை மெலிய" என்னும் ஆன்றோர் வாய்மொழிப்படி, 'யாழ்' ச-ப, இடமுறையையும், குழல், ச-ம, வலமுறையையும் குறிக்கு மென்றும், 'யாழ்' இராகத்தையும், குழல் தாளத்தையும் சிறப் பாய் உணர்த்தி நிற்குமென்று இசைநூல்கள் கூறுகின்றன. ஆதலினாலன்றோ, இன்னிசையின் அமுத இன்பத்தை யருந்திய செந்நாப்போதார், 'குழல் இனிது யாழ் இனிது' என்று இராகத்தையும், தாளத்தையும் இசைத்துக் காட்டினர். இன் னிசை அன்பை ஊட்டுவது ; அன்பினால் விளைந்த பொருட்கள் தம் மக்கள் ஆதலின், இன்னிசையினும், தம் மக்கள் மழலைச் சொல் மிக இனியது என்று கூறினர்.

## தமிழ் நெடுங்கணக்கும், தமிழ் இசையும், யாழின் அமைப்பும்

தமிழ் நெடுங்கணக்கு முப்பத்துமூன்று எழுத்துக்களாலாயது என்பது தொல்காப்பியங் கற்கும் மாணவருங்கூட அறிந்த உண்மையாகும். உயிர்-12; மெய்-18; சார்பு-3, ஆக 33. ஆனால், தமிழ் அரிச்சுவடியில் 31 எழுத்துக்கள்தான் காண்கிறோம். இஃதென்னனமெனின் கூறுதும். குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் இம்மூன்றுமே சார்பெழுத்துக்களாகும். இம்மூன்று சார்பெழுத்துக்களையும், 'முப்பாற்புள்ளி' என்னும் ஒரே எழுத்தே குறிக்கும் என்று அகத்தியர் வழித்தோன்றல் என்று கருதப்படும் சிவஞானமுனிவர் பெருமான் கூறுகின்றனர் என்ப. உயிரெழுத்துக்களில் ஏழு நெட்டெழுத்துக்களும் (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ) பண்ணிசைகளைக் குறிக்கும். இவைகளினின்றே, இறைவனது எழுவகைத் தாண்டவமும் எழுந்தன என்று நம் புராணங்கள் கூறும்.

தமிழ் இசையைப் பற்றிய நுண்ணிய குறிப்புக்கள், 'கருணாமிர்த சாகரம்' என்னும் இசைக்கடலினின்று அறியலாம். மலை போன்ற இந்நூலை நமக்கு அளித்தவர் திருநெல்வேலி மாவட்டத் திற்றோன்றி தஞ்சாவூரில் வாழ்ந்து உலகெங்கும் தம் அழியாப் புகழ்நாட்டிய உயர்திரு இராவ்சாகிப் மு. ஆபிரகாம் பண்டிதராவர். இசைக்கலைக்கும் விஞ்ஞானத்துக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு கணிதமுறையிலும் விளக்கப்பட்டுள்ளது.

## யாழும் மனித உடம்பும்

இன்னும், யாழைப்பற்றிய குறிப்புக்களில் சாலச் சிறந்தது ஒன்று இங்கு சிந்தித்தல் தகுதியே. மனித உடலுக்குத் தனி ஆதாரமாயுள்ளது முப்பத்துமூன்று எலும்புகளாலாய முதுகந் தண்டு வரிசை அல்லது வீணாத்தண்டு (the spinal cord). இந்த வீணாத்தண்டில் பல வளைவுகள் உண்டு. கருவறையில் (in utero), Notochord என்னும் மூலப்பகுதியிலிருந்து தோன்றி, பின்னர் வளர்ந்து உறுதியடைந்துள்ளது. இத்தண்டிலேதான், நம் நாட்டுத் தனிப்பெருஞ் சித்தர்கள்கண்டு உணர்த்திய உடலின் ஆறாதாரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதினின்றுதான், மனித உடலிலுள்ள நரம்புகள் எல்லாம் (without exception), தோன்றி எழுகின்றன. இதே நரம்புத் தண்டிலேதான், இடைகலை, பிங்கலை, சுழுமுனை யென்னும் நாடிகள் ஓடுகின்றனவென்றும், குண்டலினிசத்தி சுற்றிச்சுற்றி செல்கின்றதென்றும், பண்டைச் சமய, மருத்துவ நூல்கள் அறிவிக்கின்றன. யாழின் உருவத்தைக் காண்பவர்கள் அதில் சில கோட்டங்கள்

(கோணுதல்) உண்டென்பதை அறிவார்கள். இசைக்கருவியாகிய யாழும் மனித உடலின் மூலப்பகுதியாகிய முதுகந்தண்டும் உருவத்தில் ஒரே மாதிரியாகக் காணப்படுகிறதென்பது இங்கு மறவாது மனதிற் பதிக்க வேண்டிய பொருளாகும். இதே வீணாத்தண்டைத்தான் நம் முன்னோர், திருக்கோயில்களில், முப்பத்துமூன்று வளையங்கொண்ட கொடிமரமாகக் குறித்துக் காட்டினரென்று முன்னரே விளக்கப்பட்டுள்ளதை இங்கு நினைப்பூட்டிக் கொள்வோமாக. இங்ஙனம் வீணாத்தண்டும் யாழும் உருவத்தில் ஒன்றுபோலிருப்பது பெருவியப்பல்லவா? இக்கருத்தையொட்டிய குறிப்புக்கள் திருமூலநாயனார் அருளிய திருமந்திரம் மூவாயிரத்தில் மலைபோல் மலிந்துள்ளன.

## ஏழிசையின் தனிச் சிறப்பு

யாழினின்று எழும் ஏழிசையைப் பற்றிய குறிப்புக்கள் பல உள. ஏழிசைகளும், ஒன்றைவிட ஒன்று எழுந்து ஒலிப்பதனாலும், ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு பகுதியை உடையதனாலும், எழு என்னும் வினைச்சொல்லுக்கும் ஏழு என்னும் எண்ணுக்கும் மிகுந்த தொடர்பு உண்டென்று கருத இடமுண்டு. பண்டையத் தமிழ் நூல்களிலும் சமய நூல்களிலும் ஏழிசையைப்பற்றிக் கூறாத நூலே கிடையாது. ஆண்டவனே ஏழிசையாயும் இன்னிசைப் பயனாயும் உள்ளவன் என்று கூறுப. ஒவ்வொரு தேவாரப் பதிகத்திலும் 'ஏழிசை' நிரம்பியே யிருக்கும். "செயிரியர் மகரயாழின்றேம்பிழி தெய்வகீதம் ஏழமைந்த இசை" என்று பள்ளியடைப்படலம் கூறுகிறது.

## ஏழிசையும் விஞ்ஞானக் கலையும்

விஞ்ஞானக் கலையில் (Chemistry); 'Periodic Law' என்னும் ஒரு நியதியுள்ளது. உலோகங்கள் (Elements) ஏழேழாய் இயற்கையாகப் பிரிவுபட்டுள்ளனவென்றும், அவைகளின் குணங்களும் ஏழு பெரும்பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளனவென்றும் இந்நியதியால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதினின்றும் இவ்வுலகை இயக்கும் சத்தியும் ஏழு பிரிவில் அடங்கும் என்று ஊகிப்பதற்கிடந் தருகிறது. முன்னர் விரிவாய் விளக்குதும். ஞாயிற்றின் ஒளியை விஞ்ஞானமுறையில் வகுத்துப் பார்க்கும்பொழுது அதிலும் ஏழு நிறங்கள்தான் தோன்றுகின்றன. அதைத்தான் (Solar spectrum), Vibgyor என்றழைப்பர். விவிலிய நூலில் (The Holy Bible) ஒவ்வொரு பகுதியிலும் ஏழ் என்னும் எண்ணுடன் தொடர்ச்சியுள்ள அநேக குறிப்புக்கள் ஒளிரும். கிறித்துவ சமயத்தார் ஏழு என்னும் எண்ணை தனிச்சிறப்பு வாய்ந்த எண்ணாகவே (Representative Number)

கருதுகின்றனர். சைவசமய நூல்கள் 'சத்திபேதம்' ஏழுதான் என்று ஆணையிட்டுக் கூறும். பொதியமலையிற்றோன்றிய தனிப் பெருஞ் சித்தராகிய சிவஞானமுனிவர், சிவஞானமாபாடியம் என்னும் நுந்தாவிளக்கில் பின்வருமாறு வரையறுத்துக் காட்டியுள்ளார். "உண்மையாஞேக்குவார்க்கு சிறப்புத்தொழில் பற்றி எண்ணப்படும் சிவபேதம் ஏழும் சத்திபேதம் ஏழுமாமெனக் கொள்க"—சிவஞானபாடியம்-பக்கம் 278. உலகமக்கள் யாவரும் ஏழு பெரும்பிரிவுகளில் அடங்குவரென்பது பெரும்புலவர்களது கூற்று. இசைக்கலையில் 'அடி' அல்லது 'Foot' என்று கூறுவதற்கும், ஒரு அடியைப் பன்னிரண்டு பிரிவாக வகுத்தற்கும் சமயச்சார்பான கருத்துக்கள் உண்டென்று உள்குவாரும் உளர். ஏழின் சிறப்பை எடுத்துக் கூறத்துணிவது ஏழுகடலையும் அளக்க எண்ணியது போலாகும். தமிழ் இசைக்கும், தமிழ் நெடுங்கணக்குக்கும் உயிரெழுத்துக்களில் ஏழு நெட்டெழுத்துக்களுக்கும் தெய்வீகமான தொடர்பு காணப்படுகிறதென்று கூறுவது மிகையாகாது.

ஆகவே, 'யாழுங் குழலும்' என்னும் இப்பகுதியில் பண்டைத் தமிழர் இசைக்கலையிற் றலைசிறந்து விளங்கினர்; இக்கலையை, விஞ்ஞானம், கணிதம், சமயம், தாண்டவம் இவைகளோடு ஒத்துநோக்கி நுகர்ந்தனர். ஏழிசைகளையும், ஏழு நெட்டுயிரெழுத்துக்களால் குறித்துவந்தனர். ஏழிசைகளுக்கும் ஏழு கன்னிகைகள் வணக்கத்திற்கும், ஏழு கோள்களுக்கும், பகலவன் ஒளியிலுள்ள ஏழு நிறங்களுக்கும் தொடர்பு காட்டினர்; இன்னும் மொஃகெஞ்சதாரோவில் வாழ்ந்த மக்கள் பண்பாட்டுக்கும், நமது சமயக்கருத்துக்களுக்கும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகின்றது என்றெல்லாம் ஒருவாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மேலும், பொய்யாமொழிப் புலவர் அருளிய 'குழல் இனிது யாழ் இனிது' என்னும் குறள்வெண்பாவில் குழல் ஆடலையும், யாழ் பாடலையும் பொருத்திக் காட்டுவதற்கு எழுந்த திருக்குறள் என்பதும் சுட்டப்பட்டுள்ளது. இறுதியாக, தமிழ்நெடுங்கணக்கு முப்பத்து மூன்றில் இசையைக் குறிக்கும் எழுத்து ஏழு நெட்டுயிர் எழுத்துக்கள்தான் என்று பன்முறை கூறி நிறுத்துகின்றோம். குற்றங்களைந்து குணத்தை நாடும்படி இதைப் படிப்பவர்களை வேண்டுகின்றோம். இனி, தமிழ் இலக்கணத்துக்கும் தமிழ் நெடுங்கணக்குக்கும் சமயத்தொடர்புண்டாவென்பதை அடுத்து ஆராய்வாம்.

(தொடரும்)

# தமிழ் எழுத்து மாற்றம்!

[பண்டித புலவ வித்துவ ஞா. தேவநேயன், எம். ஏ.,]

விடுதலைபெற்ற இந்தியாவில், தமிழ்நாடு போம்போக்கும் தமிழ்ப்புலவர் போம்போக்கும் தமிழாக்கத்திற் கேதுவாய்த் தோன்றவில்லை. தமிழதிகாரம் மெல்லமெல்லத் தமிழறியாத பெருமாளர் கைக்கும் தமிழ்ப்பகைவர் கைக்கும் நழுவிக்கொண் டிருக்கின்றது. "ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோயிலாண்டி" என்பதுபோல், தமிழும் தமிழ்ப் புலவரும் எவராலும் எங்ஙனமும் மாற்றப்படற்குரியராயினர். தமிழைப் பல துறையிலும் மாற்றுவதற்கே எல்லாரும் முழுவுரிமை எய்தியுள்ளனர்.

**தமிழ் வளர்ப்பிற்கு ஒரு பொதுக்கழகம் இல்லாமை**

பண்டைக்காலத்தில் பாண்டிநாட்டுத் தமிழ்க்கழகம் ஒன்றே தமிழகம் முழுமைக்கும் பொதுவாயிருந்து, குல மத வேறுபாடற்றுத் தமிழாக்கம் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு, முதுநூலாராய்ச்சியும் புது நூலாக்கமுமாகிய இருவகைத் தொண்டாற்றி, தொல்லாசிரியர் நல்லாணைவழியே எவ்வகையிலும் எள்ளளவும் தமிழ்மரபு கெடாது, தமிழை வளர்த்துவந்தது. தமிழகத்திலுள்ள பெரும்புலவர் எல்லாரும் அதில் சேர்ந்திருந்தனர். பரிசளிப்பு முறையில் பாண்டியர் அவரைப் போற்றிவந்தனர். ஆரியம் தமிழகத்து வேரூன்றும்வரையும், பாண்டியர் தொன்றுதொட்டுக் கழகம்நிறுவித் தமிழை வளர்த்து வந்ததாகத் தெரிகின்றது. கடல்கோள்களால் நேர்ந்த இட வேறுபாட்டால் கழகம் மூன்றெனப்பட்டதேயன்றி, அதன் குலைவால் நேர்ந்த இடையீட்டாலன்று. மொழியும் இலக்கியமும் பற்றிய முழு அதிகாரமும் கழகத்திற்கே இருந்தது.

தற்காலமோ, அதிகாரமற்றமுறையில், தமிழை வளர்த்தற்கோ தளர்த்தற்கோ, 'மதுரைத் தமிழ்ச்சங்கம்' என்றும், 'கரந்தைத் தமிழ்ச்சங்கம்' என்றும், 'நெல்லைத் தமிழ்ச்சங்கம்' என்றும், 'சென்னைத் தமிழ்ச்சங்கம்' என்றும், பிறவாறும், பற்பல சங்கங்கள் தோன்றி வெவ்வேறு கொள்கையுங் கோட்பாடுங் கொண்டு, ஒவ்வாத முறையில் பற்பல வினைகளும் வேலைகளும் செய்துவருகின்றன. இவை போதாவென்று இன்று 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என்றும் ஒன்று தோன்றியுள்ளது. இவற்றின் தொழில்களை நோக்குங்கால், குல மத கட்சிச் சார்பான தமிழ்ச்சங்கங்களாய்த் தோன்றுகின்றனவே யொழிய, எல்லார்க்கும் பொதுவான தமிழ்ச்சங்கங்களாய்த் தோன்றவில்லை,

அவை அங்ஙனமிருப்பின், ஒன்றாயிருக்கும்; அல்லது இணைக் கப்பட்டிருக்கும்.

இனி, அதிகார முறையில், அரசியலார் பாடப்புத்தகக் குழுவும், பல்கலைக்கழகத் தமிழ்ப்பாடக் குழுவும் உள்ளன. இவற்றால் ஒப்பம்பெறும் புத்தகங்கள் சிலவற்றில் எழுத்துப் பிழை, சொற்பிழை, இலக்கணப்பிழை இருப்பினும் இருக்கும்.

இங்ஙனம், தமிழ்ப்புலவர் குழாங்கள் பல்வேறுபட்டுக் கிடப்பதாலும், தமிழ்ப்புலமையும் தமிழ்ப்பற்றும் இல்லாதா ரும் பல தமிழ்ச்சங்க வுறுப்பினராயிருப்பதாலும், சில தமிழ்ப் பெரும்புலவர் ஒரு சங்கத்திலும் சேராதிருப்பதாலும், குற்றம் பட நூலியற்றுவாரைக் குட்டுதற்கும் வெட்டுதற்கும் ஒருவரு மின்மையாலும்; வரிவடிவை மாற்றுவாரும், புணர்ச்சியைத் திரிப்பாரும், செய்யுட்களைக் களைவாரும், அயலெழுத்தையும் சொல்லையும் புகுத்துவாரும், பாடவேறுபாடு செய்வாரும், தன் சொல்லை அயற்சொல்லாகக் காட்டுவாரும், முதனூலை வழி நூலாக்குவாரும், சொல்லுக்கும் செய்யுட்கும் ஒவ்வாத பொருள் கூறுவாருமாய்; 'பல்குழுவும் பாழ்செயும் உட்பகையும் கொல் குறும்பும்' தமிழுக்குத் தோன்றியுள்ளன. இங்ஙனம் ஆளாளுக் கோர் அம்பலம் பண்ணுவதால், தமிழை மரபுநெறி வழாது வளர்த்தற்கில்லை. சில தான்றோன்றித் தம்பிரான்மார் தமக்குச் சற்று அரசியலதிகாரம் வாய்த்தவுடன், 'நாதையற்ற கோவி லுக்கு நான்தானடா பூசாரி' என்று சில குழுக்களைக் கூட்டிச் சில நிதிகளையும் திரட்டித் தமக்குப் பேரும்புகழும் வருவதையே பயனாகக்கொண்டு, பல தமிழ்த் தளர்ச்சிவேலைகளைச் செய்துவரு கின்றனர்

திருக்குறளைப் புறக்கணிப்பவரும் தமிழ்ப்புலவரைப் பழிப்பவரும்கூடத் தமிழ்த்தலைவராய்க் கிளர்ந்தெழுவது விந்தை யினும் விந்தையே!

### இருவகையதிகாரம்

அறிவதிகாரம் (Literary Authority), ஆட்சியதிகாரம் (Administrative Authority) என அதிகாரம் இருவகைத்து. இவற்றுள், அறிவதிகாரம் கல்வியால் தானாய்வருவது; நிலைத்தது: ஆட்சியதிகாரம் பிறர் அமர்த்தத்தால் அல்லது தேர்தலால் வருவது; நிலையற்றது. அறிவதிகாரி ஆட்சிவகையில் ஆட்சியதி காரிக்கு எங்ஙனம் அடங்குதல்வேண்டுமோ, அங்ஙனமே ஆட்சி யதிகாரியும் அறிவுவகையில் அறிவதிகாரிக்கு அடங்குதல் வேண்டும். இது என்றும் செல்லும் உலகப் பொதுவிதி. அறி வதிகாரிகளெல்லாம் ஆட்சியதிகாரிகளாக இருக்கமுடியும்;

ஆயின், ஆட்சியதிகாரிகளெல்லாம் அறிவதிகாரிகளாக இருக்க முடியாது.

**ஆங்கிலத் தமிழ்ச் செய்தித்தாளாசிரியர் ஏற்றத்தாழ்வு**

மேல் நாட்டிலும் கீழ் நாட்டிலும் ஆங்கிலச் செய்தித்தாளாசிரியரெல்லாரும் சிறந்த இலக்கிய அறிஞர்; அல்லது குறைந்த பக்கம் நல்ல மொழியறிஞர். தமிழ்ச் செய்தித்தாளாசிரியரோ பெரும்பாலும் இலக்கணவிலக்கியப் பயிற்சியில்லாதவர்; புலவர் தேர்வு தேறாதவர். ஆயினும், புலவர்வழித் தாம் நிற்காது தம் வழிப் புலவர் நிற்க விரும்புகின்றனர்.

தூய தமிழ்ச்சொற்களிருப்பவும், அவற்றுக்குப் பதிலாகப் பிற சொற்களையாண்டு கலவைநடையில் எழுதி வருவதே, தமிழ்ச் செய்தித்தாளாசிரியர் வழக்கமாயிருந்து வருகின்றது. இலக்கிய அறிவும் மொழிப்பற்றும் இல்லாதவர் தமிழுக்கு எங்ஙனம் அதிகாரிகளாக முடியும்?

**ஓரிரு புலவர்க்குத் தமிழெழுத்து மாற்ற அதிகாரமின்மை**

இனி, பெரும் பட்டமும் பெரும் பதவியும் பெருஞ் சம்பளமும் பெற்றிருத்தல் காரணமாக, இரண்டொரு புலவர் மட்டும் தமிழுக்கு முழு அதிகாரிகளாகிவிடார். கலியாணசுந்தரனார், பண்டிதமணியார், பாரதியார் முதலிய பெரும்புலவரையும் பிற மொழியறிஞரையும் கேட்டே, தமிழ் எழுத்தில் மாற்றஞ்செய்தல் வேண்டும்.

தமிழெழுத்து மாற்றும் முழுவதிகாரமும் தமக்குண்டென்று ஓரிரு புலவர் தருக்குவரேல், அவர் பல்கலைக்கழகத் தமிழகராதியில் தமிழ் வடமொழி வழித்தாகக் காட்டப்பட்டிருப்பதை ஒட்டியோ வெட்டியோ பேசித் தம் கருத்தை நாட்டித் தம் அதிகாரத்தைக் காட்டுக.

வினையின் இயல்பையும் பின் விளைவையும் சிறிதும் கருதாது, ஒரு குழுவில் இடம் பெற்றதே போதுமென்று மகிழ்வது, புலமக்களும் பொதுமக்களுமாகிய இருசார் தமிழர்க்கும் இக்காலத்தியல்பாயுள்ளது.

**தமிழெழுத்தின் சீர்மையும் பிறமொழியெழுத்துக்களின் குறைபாடும்**

இதுபோது வழக்கிலுள்ள தமிழ் அரிவரியைப் பிறமொழியரிவரிகளோடு ஒப்புநோக்கினால்தான், முன்னதின் சீர்மை விளங்கும்.

வடமொழியரிவரியில், gh, bh; ங, ட; bh, m; ஆகிய இவ் வீரெழுத்துக்கள் சிறிதே தம்முள் வேற்றுமையுடையன. kh

என்னும் எழுத்தும் ஸ்வ என்னும் கூட்டெழுத்தும், 'ரவ'போ லும் தோன்றும். முன்னும் பின்னும் கீழும் சேர்த்தெழுதும் கூட்டெழுத்துக்கள் (சம்யுக்தாக்ஷரம்) 160-க்கு மேலுண்டு. இத ஞல் மிக நுணுக்கியும் வரிநெருக்கியும் எழுதமுடியாது. கூட்டெ ழுத்துக்கள் பலவற்றிற்குத் தனி அச்சுருக்கள் (Types) வேண் டும். உயிர்மெய் வரிகள் (33 × 14) 462.

வடமொழியரிவரியையே கொண்ட இந்தி யெழுத்துக்களில் இக்குறைபாட்டோடு இடை கடை வரும் அகரவூமையெழுத்துக் களும் (Silent Letters) உண்டு. உயிர்மெய் வரிகள் (33 × 12) 396.

தெலுங்கரிவரியில், ஒ, bh; ப, வ; ந, ஸ; ஆகிய இவ்வீ ரெழுத்துக்கள் தம்முள் மிகச்சிறிதே வேறுபட்டு மயக்கத்திற்கிட மாவன. முன்னும் பின்னும் கீழும் சேர்த்தெழுதுங் கூட்டெ ழுத்துக்கள் இடத்தை அடைப்பன. மொ, மோ, யி, யீ, யொ, யோ, ஹொ, ஹோ, ஆகிய உயிர்மெய்யெழுத்துக்கள் ஏனைய வற்றினும் வேறுபட்ட உயிர்க்குறி யுடையன. உயிர்மெய் வரி கள் (35 × 13) 455. இவையல்லாது, 'நகாரப்பொல்லு' என்னும் ஒரு தனி னகர மெய்வரியும், 'பண்டிர' அல்லது 'சகட்டிரேப்ப' என்னும் றகரமெய்யும், ஒரு மெய்க்கு அல்லது உயிர்மெய்க்குப் பின் எழுதி முன் பலுக்கப்பெறும் 'வெலப்பலகிலக' என்னும் ரகர வரியும், உள்ளன.

கன்னட அரிவரி தெலுங்கரிவரியைப் பின்பற்றியதாத லின், அதிலும் இத்தகைய குறைபாடுண்டு. கன்னட உயிர்மெய் வரிகள் (34 × 14) 476.

மலையாள அரிவரியில், (குற்றியலுகர) லு, ஞ; என்னும் ஈரெழுத்தும் kh, ch, p, v, ஆகிய நாலெழுத்தும், மயக்கத்திற் கிடமாவன. கு, க என்னும் ஈரெழுத்தும் நுணுக்கெழுத்தில் கூர்ங்கண்ணருக்கன்றி வேறுபாடு தெரியா. உகர ஊகாரமேற்ற உயிர்மெய்கள் ஒரியல் (Uniform) வடிவு கொண்டனவல்ல. முன் னும் பின்னும் கீழும் மேலும் சேர்த்தெழுதும் கூட்டெழுத்துக் கள் 300-க்கு மேற்பட்டன. இவற்றுட் சிலவற்றுக்கேனும் தனி அச்சுருக்கள் வேண்டும். ch, b, y, v, ஆகிய நாலெழுத்தும் இரட்டிக்கும் கூட்டெழுத்துக்களில் கீழெழுத்து ஒன்றுகவே இருக்கும். உயிர்மெய் வரிகள் (36 × 16) 576.

தமிழிலோ ஒவ்வோர் எழுத்தும் எளிதாய் வேறுபடுத் தறியக்கூடிய தனி வடிவுள்ளது. மெய்கள் பதினெட்டே. இத ஞலும், கூட்டெழுத்தின்மையாலும் தமிழெழுத்துத் தொகை பிற இந்திய மொழியெழுத்துத் தொகையினும் எத்துணையோ

குறைகின்றது. உயிர்மெய் வரிகள் (18 × 12) 216. ஆய்தம் ஒன்று. ஆக, தமிழெழுத்துக்கள் மொத்தம் 235-தான்.

சில உயிர்மெய் வரிகள் தமிழில் ஒரியல் வடிவுகொண்டன வல்லவெனின், இக்குறைபாடு தெலுங்கு கன்னட மலையாளத் திலும் உள்ளதே! அதற்கென்செய்வது?

உருதுவிற்குரிய பாரசீக - அரபி யரிவரியில் உயிர்மெய் வரிகள் இல்லாவிடினும், பலவெழுத்துக்கள் ஒரே வடிவுகொண்டு மேற்கீழ்ப் புள்ளித்தொகை வேறுபாட்டாலேயே வேறுபடுக்கப் படுகின்றன. பெரும்பாலும், ஒவ்வோரெழுத்திற்கும் சொல்லின் முதலிடை கடைக்குரிய மூவேறு வடிவுண்டு. யகரவரி இகரத் தையும், வகரவரி உகரத்தையும், குறிக்கின்றன.

நுணுக்கியும் நெருக்கியும் அழகாகவும் தெளிவாகவும் மணி போல் எழுதப்பெறும் எழுத்துக்களுள், தலைமையானது ரோம (Roman) எழுத்து. அதற்கடுத்தது தமிழே. தமிழ் எழுத்து வடிவை மாற்றினால், பல இன்னலும் அழகிழப்பும் நேரும்.

பிறமொழி யெழுத்துக்களில் எத்துணையோ குறைபாடிருக் கும்போது, அவற்றையெல்லாம் கவனிக்காமல் தமிழெழுத்தை மட்டும் மாற்றுவது எற்றுக்கு? மேலும், ஒரு அல்லது சில செய்தித்தாளில் எழுத்தைமாற்ற விரும்பின், அதுபற்றிப் பாடப் புத்தகங்களிலும் இலக்கியத்திலும் ஏன் மாற்றவேண்டும்? ஏற் கெனவே தமிழெழுத்து பலமுறை தகுந்தமுறையில் சீர்திருத்தப் பெற்றே இற்றை வடிவெய்தியுள்ளதென்பதை, தமிழ் எழுத்து மாற்றக் கோட்பாட்டினர் அறிவாரா? அவர் விரும்புவது சீர் திருத்தமா? அல்லது (சீர்கேடான) மாற்றமா?

### தமிழெழுத்தில் செய்யவேண்டிய திருத்தம்

தமிழெழுத்தில் இப்போது செய்யவேண்டிய திருத்தம் இரண்டே. ஒன்று 'ஈ'யை நீக்கி '![ீ]'யை வைத்துக்கொள்வது; இன்னொன்று ஔகார உயிரிலும் அதனையேற்ற உயிர்மெய்களி லும் 'ள' வரியைச் சற்றுச் சிறிதாக்குவது. '![ீ]' வரிதான் முதலாவது இருந்தது. பின்பு இடைக்காலத்தில் அது விலக்கப் பட்டுக் கிரந்த வரியாகிய 'ஈ' புகுத்தப்பட்டது. ஔகார வரியி லுள்ள 'ள' வரியும் 'ஊ' வரியிற்போல் முதலாவது சிறிதாகவே யிருந்து பிற்காலத்தில் தவறாகப் பெரிதாக எழுதப்பட்டது.

### தமிழ்ப்புலவர் செய்த தவறு

இந்நூற்றாண்டில் எழுத்துப் பற்றித் தமிழுக்கு இருவகை யில் ஊறு நேர்ந்தபோது தமிழ்ப்புலவர் தடுத்திலர். ஒருமொழி யில் பல கருத்துக்கட்கும் சொல்லிருக்கும்போது, அவற்றுக்குப்

பதிலாகப் பிறமொழிச் சொற்களையும், எழுத்துக்களையும் வேண்டாது புகுத்துவது, ஒருமொழியைக் கெடுக்கும் வழியாகும்.

தமிழில் ஒரே யுயிர்கொண்ட உயிர்மெய் வரிகளெல்லாம் ஓரியல் வடிவுகொண்டிருத்தல் வேண்டுமென்பது, திருந்திய கருத்தன்று. எடுத்துக்காட்டாக ஐகார உயிர்மெய்களை எடுத்துக் கொள்ளின், அவை ஓரியல் வடிவுகொண்டிராமைக்குத் தகுந்த காரணமுண்டு. 'ணை' என்பதற்குப்பதிலாக 'னை' என்று எழுதின், கூட்டெழுத்தாயெழுதுங் கையெழுத்தில் அது இரு னகரம்போல் தோன்றும். இம்மயக்கத்தை நீக்குதற்கே, ஐகார வுயிர்க்குறி, பல சுழிகளும் வளைவுகளுங்கொண்ட எழுத்துக்கட்கெல்லாம் மேலிடப் பெற்றுள்ளது. இங்ஙனமே ஆய்ந்துநோக்கின், ஓரியல் வடிவுபெறாத பிற உயிர்மெய் வரிகட்கும் காரணம் தோன்றும். அச்சுவடிவு ஒன்றையே கவனித்துக் கையெழுத்து வடிவை நோக்காதவர்க்கே, தமிழ் உயிர்மெய்வரிகள் ஒழுங்கில்லாதன வாகத் தோன்றலாம். கையெழுத்தும் முக்கியம்; ஆங்கிலத்தில் அதனையும் அச்சு வடிவில் அமைத்திருக்கின்றனர்.

'ஸெ' என்னும் பழைய ஐகார வுயிர்மெய்க் குறியை 'ை' என்று இணைத்தும், கு நு சு ஞு டு ணு முதலிய உயிர்மெய் வரிகளை ஒரே முறையில் வரையும் ஒற்றைக் குறியாகவும், எழுதுவதெல்லாம் எளிமையும் தெளிவும் மட்டுமன்று, காலச் சிக்கனமும் பற்றியதாகும். ஆதலால், எவ்வகையிலும், (மேற்காட்டிய இரு வரிகளையன்றி) மாற்றம் செய்யத் தேவையில்லை. புதிய எழுத்துமாற்றம் செய்தித்தாள்கட்கு இன்றியமையாததாயின், அவைமட்டும் அதை ஆளட்டும். ஏனையர்க்கு வேண்டா.

### இன்று செய்ய வேண்டியது

புதிய எழுத்து மாற்றம் புகுத்தப்படின், பல்கலைக் கழகப் பாடப் புத்தகக் குழுவையும், தனிப்பட்டவர்க்கும் பொது மக்கட்குமுரிய எல்லா நூல்நிலையங்களையும், தமிழ்நூல் வெளியீட்டாளரையும், தமிழ்ச் சங்கங்களையும், பலவகை ஆவணங்களையும், மாணவரையும், தாக்கிப் பல இடர்ப்பாட்டை விளைவிக்கும். ஆதலால், இதைப் புகுத்தாதவாறு அரசியலாரை வேண்டிக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத் தமிழர் புதிய எழுத்துமாற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லையென்றும், பழைய எழுத்தையே கடைப்பிடிக்கத் தீர்மானித்துள்ளனர் என்றும், சொல்லப்படுகின்றது. தமிழ்ச் சொற்களைப் போன்றே தமிழ்எழுத்தையும் தூய்மையாகப் பேணத் துணிந்த யாழ்ப்பாணம் தழைத்தோங்க!

# மதிப்புரை

**திருக்குறள் மூலம்:**

[வெளியிட்டோர்: பொதிகைப் பதிப்பகத்தார். கிடைக்குமிடம்: பொதிகைப் பதிப்பதிகம் லிமிடெட், கடலூர், N. T. விலை ரூபா 2-0-0.]

இது, அழகிய பதிப்பு; உரையாசிரியர் பரிமேலழகர், மணக்குடவர், காளிங்கர், பரிப்பெருமாள் ஆகியவர்கள் கொண்ட குறள் வைப்புமுறையைத் தெளிவாகக் காட்டுகிறது. திருக்குறளை எடுத்தாண்ட இரங்கேச வெண்பா முதல், வடமலை வெண்பா ஈறாகவுள்ள பதினொரு நூல்களிலும் காணப்பெறும் திருக்குறள் எண்களும், திருக்குறளைப்பற்றித் தற்காலப் பெரியார் பாடிய சிறந்த பாக்களுமுள. தமிழுலகம் போற்றி யாதரிக்குமாக.

**தொண்டைநாட்டுத் தேவாரம்:**

[வெளியிட்டோர்: கணபதி வாசகசாலை. கிடைக்குமிடம்: 69, கச்சேரி (கொச) வீதி, காஞ்சிபுரம், விலை ரூ. 0-12-0.]

இதன்கண் தொண்டை நாட்டிலுள்ள முப்பத்திரண்டு திருவூர்களின் மூவர் முதலிகள் அருளிய திருமுறைகள் அடங்கியுள்ளன. அத்திருப்பதிகங்கள் அறுபத்தொன்பதாகும். இருபத்தாறு திருவூர்களில் எழுந்தருளிய சிவபெருமானை நாயன்மார்களும், ஏனை மெய்யன்பர்களும், விண்ணுட்டவர்களும், அம்மை திருமுருகன் முதலிய திருவருள் தோற்றங்களும் வழிபாடியற்றிப் பேறுபெற்ற திருவரலாறுகளும், அத்திருவூர்கட்குச் செல்லவேண்டிய வழிவகைகளும், புகைவண்டி நிலையங்களும் சுருக்க பெருக்கத்துடன் தெளிவாக ஆங்காங்கே எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வெளியீடு காஞ்சி மெய்கண்டார் கழகம் ஐந்தாவது வழிநடையின் நினைவாக வெளியிடப் பெற்றதென்பது போற்றத்தக்கதொன்று. இக்கழகத்தார் செய்துவரும் செந்தமிழ்த் தொண்டும், சிவநெறித் தொண்டும் ஏனைக் கழகங்களும் புலவர் பெருமக்களும் அருளுடைச் செல்வர்களும் பிறரும் குறிக்கொண்டு நோக்கித் தத்தம் இல்லங்களிலும் ஊர்களிலும் உயிரினும் விழுமிதாக ஓம்பி மேற்கொண்டு ஒழுகவேண்டிய திருத்தொண்டாகும். இன்னோரனைய நன்னய மாந்தர் சிலரோர் ஆங்காங்கு உலையா முயற்சி களைகணும் ஒல்லும்வகை 'பணிசெய்து கிடப்ப'தாலேயே நம் தொன்மைத்தமிழும் திருநெறியும் நின்று பயனளித்து நிலவுவவாயின. இவர்கள் திருப்பணி வாழ்வதாக. இதனைச் சைவநன்மக்கள் வாங்கிப் போற்றுவார்களாக.

**பிரபுலிங்கலீலை:**

[வெளியிட்டோர்: மயிலம் மடம். கிடைக்குமிடம். சிவா எம்போரியம், புத்தகவியாபாரம், மயிலம், S.I.Ry. விலை ரூ. 2-8-0].

இந்நூல் ஆசிரியர், கற்பனைக் களஞ்சியச் சொற்படு திறலோர் சிவப்பிரகாச அடிகளாவர். உரையாசிரியர் மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலைய சுவாமிகள் தமிழ்க் கல்லூரித் தலைவர் வித்துவான் S. துரைசாமி ஐயரவர்களாவர். இந்நூல் காப்பிய நயத்துடன் வீரசைவக் கொள்கைகளை ஆங்காங்கு விளக்கிச் செல்லும் உயர்வற உயர் குறிக்கோளாகவும் அமைந்துள்ளது. இந்நூலின் முதற்பகுதியாகும் இது. உரை கண்ணழித்துச் சொற்பொருளைச் செவ்வையாக உரைப்பதுடன், குறிப்புரைக்கண் வரலாற்று விளக்கமும், இன்றியமையா இலக்கணக் குறிப்புக்களும், சமய விளக்கமும், பிறவும் அமைந்து தெளிய இனிய வியல்புடன் ஆற்றொழுக்காச் செல்கின்றது. இத்தகைய சிறந்தவுரை ஏனைய பகுதிகளுக்கும் விரைவில் இவ்வுரையாசிரியர் வாயிலாக வெளிவர வேண்டும். இந்நூல் கற்பார்க்கும் கற்பிப்பார்க்கும் சிறந்த பெருந்துணையாகும்.

# செய்திகளும் குறிப்புக்களும்

## செவ்வாய் மண்டிலத்துத் திகழும் உயிர்கள்

நம் செந்தமிழ்த் தொன்னூல்களில் இம்மண்ணகத்தேயன்றி விண்ணகத்தும் விளக்கமுறும் பல்வேறு மண்டிலங்களிலும் அவ்வம்மண்டிலங்களுக்கியைந்த உடலுறுப்புக்களுடன் உயிர்கள் பல வாழ்கின்றன என்று விளக்கப்பட்டுள்ளன. அவ்விளக்கம் இற்றைஞான்றுள்ள மேற்புல அறிவியல்திறலோரால் ஆய்ந்து அறுதியிட்டுக் கூறும் மறுக்கொணு வாய்மொழியால் உறுதி செய்யப்படுகின்றது. இப்பொழுது பிரித்தானியாவிலுள்ள கோள்மண்டிலச் செலவுக் கழகத்தலைவர் திரு. ஆர்தர். ஸி, கிளார்க் துரைமகனுர் நாற்பது ஆண்டுகளுக்குள் "இராக்கட்டுக் கப்பல்களில்" செவ்வாய் மண்டிலச் செலவு (பயணம்) நிகழ்வது உறுதியாகக் கைகூடுமென்று வற்புறுத்தியுள்ளார். ஆங்குக் குடியேறுபவர்கள் உயிர்த்தற்குச் செயற்கை முறையில் உயிர்க்கவேண்டியது நேரிடும் என்றனர். ஆங்கு முன்னரே வாழ்கின்ற மக்களுடன் நட்புரிமை கொண்டாடி நயந்து வாழ்வர். இவர்கள் உயிர்வளி (பிராணவாயு) மிக்குள்ள புற்பூண்டுகளைத் தின்று வாழ்கின்றனராம். இராக்கட்டுக் கப்பல் வழியாகச் செல்ல மூன்று திங்கள் செல்லுமாம்.

## கற்பின் பொற்பு காய்ச்சிய இரும்பையும் ஏந்திற்று

காசிமாவட்டத்தைச் சேர்ந்த கோலா என்ற இடத்தில் ஒரு குலப்பெண் அக்குலத்துள்ளார் சிலரின் ஐயத்தைப் போக்குவதுபற்றியும், கணவனின் கலங்காவுள்ளக் கலக்கம் விலக்கற்பொருட்டும் ஆங்குள்ளார் கூறிய ஆணைக்கிணங்க, கையில் பச்சையிலையைக் கட்டிக்கொண்டு பழுக்கக் காய்ச்சிய இரும்பை ஏந்தி ஏழடி நடந்து இணைக்கையும் சுடாது அணையிலையும் வாடாது தம் அருங்கற்பின் திறங்காட்டி அமர்ந்தனள். பின்னர் அவளை யாவரும் புகழ்ந்து போற்றினராம். குடும்பத்தார் ஐயமகன்று மெய் கண்ட தெய்வமெனப் போற்றினராம். இத்தகைய நிகழ்ச்சிகள் நம் தொன்னூல்களுள் மிகப் பல காணலாம். இஞ்ஞான்று இவ்வுண்மைகள் அருளாற்றலால் நிகழ்வன எனத் தெளியாது கற்பனை எனக் கண் மூடிக் கரையும் நுண்ணுணர்விஞர்க்கு இத்தகைய நிகழ்ச்சிகள் மெய்யுணர்வு கொளுத்துமென்க.

## மண் அரிப்பைத் தடுக்கும் மாண்புல்

சியார்ச்சியாவின் மண்ணூற்றலை நுண்ணிதின் ஆயும் திறலார் திரு. பால்விபேட்டன் துரைமகனுர் "குட் ஸீசுவையின்" என்ற புல்வகை ஆங்கு மண்ணரிப்பைத் தடுக்கப் பெரிதும் உதவியாகவிருப்பது கண்டு இவ்வகைப் புல் இந்தியாவுக்குப் பேருதவியாகுமென்கின்றனராம். அப்புல் நாளொன்றுக்கு ஒன்பது அங்குலம் வளருகின்றதாம். இது கால்நடைகளுக்கு நல்ல தீனியென்றும் கூறினராம்.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

# கழகப் புதிய வெளியீடுகள்

**உரிமைக்கவிஞர் பாரதியார் :** புலவர் அரசு

*புதுமுறைக் கவிதைகள் பாடித் தமிழ்நாட்டில் உரிமை வேட்கையை உண்டாக்கிய பாரதியாரின் வாழ்க்கை வரலாறு, மாணவர்க்கேற்ற முறையிலமைந்தது.*

மலிவுப் பதிப்பு: 0 12 0 உயரிய பதிப்பு: 1 2 0

**மறைமலையடிகள் :** புலவர் அரசு

*தனித்தமிழ் நடையை வளம்படுத்தி, ஆராய்ச்சியாளர், கட்டுரையாளர், நூலாசிரியர் பலரைத் தோற்றுவித்த பெருமை மறைமலை அடிகட்கே உண்டு. அவர்தம் வரலாறு மாணவர்க்குரிய நடையில் வெளிவந்துளது.*

மலிவுப் பதிப்பு: 0 12 0 உயரிய பதிப்பு: 1 2 0

**வ. வெ. சு. ஐயர் :** புலவர் அரசு

*அடிமை இந்தியாவை, உரிமை இந்தியாவாக்க உழைத்த புரட்சி வீரரில் ஐயரும் ஒருவர். அன்னாரின் வாழ்க்கை வரலாறு, எளியநடையிலமைந்தது.*

மலிவுப்பதிப்பு: 0 12 0 உயரிய பதிப்பு:. 1 2 0

**கட்டுரை முத்தாரம் :** கா. அப்பாத்துரை

*ஆங்கில இலக்கியக் கட்டுரைகளில் சிறந்த சிலவற்றை எளிய, இனிய தமிழ் நடையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மாணவர் மொழிவளமும், கருத்துவளமும் ஒருசேரப் பெற துணைபுரிவது. பல்வேறுபட்ட மேனாட்டுப் புலவர் பெருமக்களின் உள்ளத்தைத் தெள்ளிதின் காட்டும் சிறந்த கருத்தோவியங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.*

மலிவுப் பதிப்பு : 1 8 0 உயரிய பதிப்பு : 2 4 0

**இன்சுவைக் கதைகள் :** இன்பவேள்

*சுவையும், கதைப்பண்பும் மலிந்த இத்தாலிய நாட்டுச் சிறு கதைகளில் சிறந்த சிலவற்றைத் தேர்ந்து இளமாணவர்க்கேற்ற இனிய நடையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேலும் மேலும் கற்கத் தூண்டும் சுவைமிக்க நிகழ்ச்சிகள் பல, மாணவர் உள்ளத்தை ஈர்ப்பனவாகும்.*

மலிவுப் பதிப்பு : 0 12 0 உயரிய பதிப்பு : 1 4 0

**வில்லிபாரத வசனம் :** சு. அ. இராமசாமிப் புலவர்

*'நீடாழி உலகத்து மறைநாலோடு ஐந்தென்று நிலைநிற்க, வாடாத தவவாய்மை முனிராசன் சொன்ன மாபாரத'க் கதையை, இம்மியும் வழுவாது, நல்வினை தீவினையின் பயனை எடுத்தியம்பும் செம்மைசால் உள்ளமும், பெருநோக்கும் உடைய வில்லிபுத்தூராழ்வார் இனிய செந்தமிழ்ப் பாக்களாக எழுதியுள்ளதைத் தமிழுலகம் நன்கறியும். அந்நூலை அடியொற்றித் தெள்ளிய சுவைமிக்க உரைநடையில் இந்நூல் வெளிவந்துளது. இன்றியமையாத இடங்களில் செய்யுட்கள் பலவும் இணைகப்பெற்றுள்ளன. இவ்வுரைநடை நூலைப் பயில்வார் விழுமிய உரைநடை எழுதும் ஆற்றலையும், சிறந்த கருத்துக்களையும் பெறுவரென்பது திண்ணம்.*

அழகிய மேலட்டையுடன்கூடிய கலிக்காக் கட்டு : 5 0 0

பதிவு எண் 4889

# வெள்ளிவிழா மலர்

நம் 'செந்தமிழ்ச் செல்வி' கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ்மொழிக்குச் சீரிய முறையில் தொண்டாற்றி வந்துள்ளதென்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். தமிழ்ப் பேரறிஞர்களின் கருத்தாழமிக்க கட்டுரைகளால் மொழிவளர்ச்சியில் பெரும் பணியாற்றிவரும் செல்வி, மேலும் செவ்விய முறையில் தன் பணியைத் தொடர்ந்து ஆற்றி வருவதுடன், கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருப்பதை அன்பர் யாவரும் அறிவர்.

இருபத்தைந்தாண்டுகள் முடிவடைந்ததால், செந்தமிழ்ச் செல்வி 'வெள்ளிவிழா மலர்' வெளியிடத் திட்டங்கள் வகுத்து வருகின்றோம். அழகிய வண்ண ஓவியங்கள் பலவும், கருத்துச் செறிந்த கட்டுரைகள் கவிதைகள் பலவும், அழகிய மூவண்ண அட்டையும் தாங்கி உயர்ந்த தாளில், பெரிய அளவில் வெள்ளிவிழா மலர் வெளிவரும். தமிழர் திருநாளாகிய தைப் பொங்கல் நன்னாளில், இம் மலர் உங்கள் கைகளில் தவழ்ந்து உங்களை மகிழ்விக்கும்.

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெருந் தொண்டாற்றிய நம் செல்வியின் வெள்ளிவிழா மலர் எல்லாவகையிலும் சிறப்புறத் தங்கள் அன்பான ஒத்துழைப்பை நல்கியருள வேண்டுகின்றோம்.

பிற விளக்கமான குறிப்புக்கள் அடுத்துவரும் இதழில் வெளியிடப்பெறும்.

அப்பர் அச்சகம், 2-140, பிராட்வே, சென்னை-1.